# சுமைதாங்கி 2017



யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/ து)

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைதாங்கி

# 2017

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்

கூட்டுறவுச் சங்கம் (வ/து)

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,

கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


இதழின் பெயர் :- சுமை தாங்கி

வகை :- கூட்டுறவு

மலர்க்குழு :- திரு. செ. ஜெயக்குமார் (தலைவர்)

:- திரு க. செல்வச்சந்திரன் (செயலாளர்)

:- திருமதி. பி. கஜேந்தினி (பொது முகாமையாளர்)

பதிப்பு :- 2017

பக்கங்கள் :- XIX + 45

பிரதிகள் :- 400

அச்சுப்பதிப்பு :- யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, அச்சகம்.

அளவு :- B5

தாளின் நிறை :- 70 g


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

01. முகவுரை I
02. ஆசிச்செய்தி
    I. கலாநிதி ஆறு.திருமுருகன் II
    II அருட்தந்தை வண.பிதா ம.றெஜி இராஜேஸ்வரன் III
03. வாழ்த்துச் செய்திகள்
    I. முதலமைச்சர் - நீதியரசர் திரு.க.வி.விக்னேஸ்வரன் IV
    II. அரசாங்க அதிபர் - திரு.நா.வேதநாயகன் V
    III. கூட்டுறவு அமைச்சர் - திருமதி ச.அனந்தி VI
    IV. முன்னாள் கூட்டுறவு அமைச்சர், மாகாணசபை உறுப்பினர் - திரு.பொ.ஐங்கரநேசன் VII
    V. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச்சங்க பதிவாளரும் - திரு.க.சிவகரன் VIII
    VI. மேலதிக அரசாங்க அதிபர் (காணி) – திரு.எஸ்.முரளிதரன் IX
    VII. பிரதேச செயலர், வடமராட்சி கிழக்கு. – திரு.க.கனகேஸ்வரன் X
    VIII. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - திரு.மோகன் XI
    IX. பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி – திரு.க.சுஜீந்திரன் XII
    X. கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு.க.சசிதரன் XIII
    XI. சங்கத் தலைவர் - திரு.செ.ஜெயக்குமார் XV
    XII. சங்கச் செயலாளர் - திரு.க.செல்வச்சந்திரன் XVI
    XIII. பாரவூர்திச் சங்க அங்கத்தவர் - திரு.செ.இராசசேகரம் XVII
    XIV. பணியாளர் - திருமதி.ச.அனுரேகா XIX
04. தலைவரின் உள்ளத்திலிருந்து 01
05. பாரவூர்திச் சங்கம் தோன்றிய வரலாறு 03
06. கூட்றவுத் துறையானது வடமாகாண மக்களின் பொருளாதார அபிலிருத்திக்கு ஆற்றுகின்ற பங்களிப்பு 05
07. கூட்டுறவில் காலடி 08
08. இலங்கை கூட்டுறவில் யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் 10
09. கரங்கள் இணைந்தால் 12
10. கூட்டுறவுக் கொள்கைகள் 16
11. கூட்டுறவு 20
12. யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத் துறையின் போக்கு 23
13. கூட்டுறவு என்பது மக்கள் இயக்கமாகும் 26
14. புாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் உள்ள பாரவூர்திகளின் அலங்காரக்கலை வேலைப்பாடுகள் 29
15. எமது சங்கத்தின் தலைவர்கள் (1997 தொடக்கம் இன்று வரை) 41
16. கடந்த கால தலைவர், பொதுமுகாமையாளர், கணக்குப்பதிவாளர் விபரம் 43
17. மலர் வெளியீட்டுக்கான அனுசரணையாளர்கள் 44
18. மலரின் இதயம் கனிந்த நன்றிகள் 45


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கமானது அதன் கன்னி முயற்சியாக கூட்டுறவு வளர்ச்சிப் பாதையில் பாரவூர்திச் சங்கத்தின் தனித்துவத்தை பதிவு செய்யும் நோக்கில் இந்நூலை வெளியிடுகின்றது.

அந்த வகையில் சிறப்பாக வடமாகாணத்தின் லொறி உரிமையாளர்களின் நலன்களை கூட்டுறவு அமைப்பினை சார்ந்து நிறைவு செய்து வருவதில் பெருமைப்படுவதோடு, இவ்வித்தியாசமான பாரவூர்திச் சேவை வெற்றி கண்டுள்ளமையும், அதனைப் பகிரங்கப்படுத்துவதோடு அதன் சேவைகளையும் பயன்பாடுகளையும் பெற்ற நலன்களையும். வெளிப்படுத்தி அதன் மூலம் பெற்ற பயனை சமூக, பொருளாதார ஒத்துழைப்பிற்கு எவ்வாறு பயன்படுத்தி கூட்டுறவின் வளர்ச்சிக்கு இச்சங்கத்தின் செயற்பாடு அல்லது ஒத்துழைப்பு, இருப்பு, பற்றிய செய்தியை கூட்டுறவு ஆர்வலர்களுக்கு வெளிப்படுத்தும் என நம்புகின்றோம்.

இன்றைய சமூகத்திற்கு குழுமம் என்ற அமைப்பு முறையை பயன்படுத்துவதில் ஒரு சிறந்த முன்னுதாரணமாக இச்சங்கம் அமைந்து காணப்படுகின்றது.

மேலும் இவ்வெளியீட்டில் சமயத் தலைவர்கள், கூட்டுறவு ஆர்வலர்களின் வாழ்த்துச் செய்திகளும் இதர படைப்புக்கள் உட்பட விசேடமாக இச்சங்கத்தின் உருவாக்கம் பற்றிய வரலாறு, பாரவூர்தி உடலமைப்பு பற்றிய அலங்கார கலை வேலைப்பாடுகள் பற்றிய ஆக்கம், கவிதைகள் கட்டுரைகள் என பல ஆக்கங்கள் பரந்து செல்வதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த வகையில் கூட்டுறவுத் துறையின் பயன்பாட்டின் வெற்றிப் பதிவாக இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மலர்க்குழு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

யாழ் மாவட்டத்தின் அரிய பங்காற்றிவரும் யாழ்ப்பாண பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 20வது ஆண்டு பூர்த்தி குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். சமூக நோக்கோடு செயற்பட்டு வரும் இச்சங்கம் எதிர்காலத்திலும் சிறந்த பணியாற்ற வேண்டும் என இறையருளை வேண்டுகிறேன்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்"

- திருக்குறள்

'சோர்வின்றி உழைப்பவர் முயற்சிகளில் ஊக்கமுடன் தொடர்ந்து ஈடுபடுவர். தமக்கு எதிராக வரும் இடையூறுகளை வெல்லும் தகுதிகளைப் பெறுவர்' என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய பல இடையூறுகளையும் சமாளித்து இயங்கும் இச்சங்கத்தை உருவாக்கியவர்கள், சங்கச் செயற்பாட்டிற்காக உழைத்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். எமது தேவஸ்தானத்துக்கும் இச்சங்கத்தின் உதவி காலத்துக்குக் காலம் கிடைத்து வருகிறது. எம் மண்ணில் சீரிய வாழ்வு மலர உழைக்கும் கரங்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆண்டவர் இயேசுவிலே உங்களை மகிழ்வோடு வாழ்த்தி இறையாசீர்களை இறைஞ்சி நிற்கின்றேன்.

போருக்குப் பின்னேயான எமது பிரதேசத்தின் கட்டுமான அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு பாரவூர்திகளின் பயன்பாடு இன்றியமையாததாகவே இருந்து வருகின்றது. இரவு பகல் பாராது பல குறைபாடுகளை எதிர்கொண்டு அசௌகரியங்களுக்கு மத்தியில் பாரவூர்தி ஓட்டுநர்களின் சேவை அளவிடற்கரியது.


இறைவனின் இகபரநலன்களை நிறைவாகப்பெற்று தொடர்ந்து உங்களின் சேவையை கண்ணியத்துடனும் பொதுமக்களின் நலன்களை எப்பொழுதும் பெரிதாகப்பேணி சமூகத்தை குட்டிச்சுவராக்கும் சமூக தீமைகளுக்கு ஒருபோதும் அடிமைகளாகாது தங்களின் சேவையினை உயர்வான நோக்குடன் செவ்வனே செய்திட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

இறையாசீர் உங்களுடன் இருப்பதாக,

அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன்
பங்குத்தந்தை
புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்
வைத்தியசாலை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி


யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுச் சட்டத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டு இருபதாவது ஆண்டுப் பூர்த்தி தினம் அதாவது 24.09.2017இல் இருபதாவது ஆண்டு பூர்த்தி விழாவை கொண்டாட இருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் வெளியிடப்படுகின்ற ஞாபகார்த்த நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தனித்தனியே சிதறிக் கிடந்த பாரவூர்தி உரிமையாளர்களை ஒன்று திரட்டி ஒரு சங்கத்தை உருவாக்கியது மட்டுமன்றி அதனை கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இயங்கக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டது ஒரு சிறப்பான நிகழ்வாகும்.

கப்பல் மூலமாக பொருட்கள் எடுத்து வரப்பட்ட போதும் மற்றும் பொருட்கள் விநியோகத்தின் போதும் அப்பொருட்களை காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை கொண்டு செல்வதற்கும் மாவட்ட செயலர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட உணவுப் பொருட்களை கூட்டாக பல பாரவூர்திகளில் எடுத்து வருவதற்கும், இச்சங்கம் மகத்தான பணி ஆற்றியதாக அறிகின்றேன்.


பாரவூர்திகள் வரையறுக்கப்பட்ட ஒரு செயற்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதன் மூலம் கட்டண அறவீடுகள் ஒழுங்கமைக்கப்பட்டன. திருப்திகரமான சேவை வழங்கப்பட்டு வருவதாக அறிகின்றேன். சுழற்சி முறையில் அனைவருக்கும் வாய்ப்புக்கள் கிட்ட வழி அளித்துள்ளமை போற்றுதற்குரியது.

வரையறுக்கப்பட்ட ஒரு சங்கமாக அமைக்கப்பட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கம் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் இச்சங்கம் மென்மேலும் வளர்ச்சியடையவும் சிறப்பான சேவையை பொதுமக்களுக்கு வழங்கவும் வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.



நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் இருபது ஆண்டுகள் பூர்த்தியினை முன்னிட்டு வெளியீடு செய்யும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

போர் அனர்த்த கால கட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தினை திறம்பட செயற்படுத்த பருத்தித்துறை, காரைநகர், காங்கேசன்துறை, மயிலிட்டி போன்ற துறைமுகங்களிலிருந்து எடுத்து வந்து வழங்கும் பாரிய பணியினை பாரவூர்தி அங்கத்தினர் மேற்கொண்டமை யாவரும் அறிவர்.

அக் காலகட்டத்தில் ஊரடங்கு வேளைகளிலும் சிறப்பு அனுமதியுடன் அரச, அரசசார்பற்ற மற்றும் தனிப்பட்டவர்களின் பொருட்களையும் அவர்களது களஞ்சியங்களுக்கு பொறுப்புடன் எடுத்து வந்து வழங்கும் பணியினை மேற்கொண்டு பலரது பாராட்டுதல்களை பெற்றுக்கொண்டமையும் அறியப்படுகின்றது.

இவ் வகையில் செயற்பட்ட இச்சங்கம் தற்பொழுது குடாநாட்டு மக்களுக்கான மணல் விநியோக செயற்பாட்டில் தனது சேவையினை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. இச் சங்கம் இருபது வருடங்களாக தனது பணியினை தொடர்ந்தும் ஆற்றிவரும்வேளையில் தமது பணியை அனைவரும் மீட்டுப்பார்க்கும் நோக்குடன் சிறப்பு மலர் வெளியீடு செய்வது மனங்கொள்ளத்தக்கது. இந்தவகையில் செயற்படும் இச் சங்கத்தினருக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்து அவர்களால் வெளியீடு செய்யப்படும் சிறப்பு மலர் மலர்ந்து நறுமணம்பரப்ப என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் தனது 20வது ஆண்டு சேவை நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற ஞர்பகார்த்த நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

A9 தரைப்பாதை தடைப்பட்டிருந்த காலத்தில் கப்பல் மூலமாக கொண்டு வரப்பட்ட அத்தியாவசியப் பொருட்களை பாரவூர்தி சேவை மூலம் மக்களுக்கு விநியோகிப்பதில் யாழ் அரசாங்க அதிபருக்கு உதவியமையிட்டு இச்சங்கத்தை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். மேலும் இச்சங்கம் தற்போது கட்டுமானப்பொருட்களை ஏற்றி இறக்கும் சேவையை ஆற்றி வருகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

இச்சங்கம் பாரவூர்தி சேவைக்கு மேலதிகமாக சேவையில் ஈடுபடும் பாரவூர்திகளின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி நிதி உதவி, அங்கத்தவருடைய மரண சகாய நிதி வழங்கல் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றமை அறியக்கூடியதாக இருக்கின்றது.

எனவே இவ்வாறான மக்கள் சேவைகளை துன்பத்திற்காளான எமது மக்களுக்கு தொடர்ந்தும் இச்சங்கம் ஆற்றவேண்டும் என விரும்புவதோடு அதனது சேவை மேலும் வளரவும், சிறப்புறவும் இவ் 20வது ஆண்டு நிறைவில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி அனந்தி சசிதரன்
அமைச்சர்,
மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல்,
சமூக சேவைகள், கூட்டுறவு
உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும்
தொழில் துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் அமைச்சு
வடக்கு மாகாண சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ் மாவட்ட பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்கம் மக்களின் பெருஞ்சுமையைச் சுமக்கும் ஒரு நிறுவனம்

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் தனது மக்கள் சேவையில் இருபதாவது ஆண்டில் காலடி பதித்துள்ளது. போர் உக்கிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் கூட நெருப்பாற்றில் நீந்தியதைப்போன்று எறிகணை வீச்சுகளின் மத்தியிலும் தம்முயிரைப் பொருட்படுத்தாது மக்களின் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி இறக்கிய பெரும் சுமையைச் சுமந்த இக்கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுள்ளது. போர் நெருக்கடிகளால் பாரவூர்திகளை சேவையில் ஈடுபடுத்த முடியாது பொருளாதார ரீதியாகப் பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், தனது சேவைக்கான கட்டணமாக அதிக இலாபம் கருதாது குறைந்தளவு கட்டணத்தையே அறவிட்டு வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

கூட்டுறவின் இலட்சியங்களில் ஒன்றான மக்கள் சேவைக்கு கூடுதல் மதிப்பளிக்கும் இச்சங்கம் தனது அங்கத்தவர்கள் நலன்களிலும் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. அங்கத்தவர்களின் இறப்புக் கொடுப்பனவு, அங்கத்தவர் குடும்பத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான கொடுப்பனவு, பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்களுக்கான கொடுப்பனவு என்பவற்றை வருடம் தப்பாமல் மேற்கொண்டு வருகிறது.

யாழ் மாவட்ட பாரவூர்திகள் சங்கத்தின் இந்த அளப்பரிய சேவைக்குப் பின்னால் அதன் அப்பழுக்கற்ற நெறியாளர்களும், அங்கத்தவர்களும், பணியாளர்களுமே உள்ளனர் என்றால் மிகையாகாது. இச்சங்கத்தின் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துவரும் இவர்கள் அனைவரையும் இயற்கை என்ற பேரிறைவன் ஆசீர்வதிக்க இறைஞ்சுவதோடு சங்கம் மென்மேலும் வளர்ச்சி அடைய என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொ.ஐங்கரநேசன்
முன்னாள் கூட்டுறவு அமைச்சர்,
மாகாணசபை உறுப்பினர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி

கூட்டுறவானது அங்கத்தவர்களின் சமூக பொருளாதார கல்வி கலாச்சார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஒன்றிணைந்து உருவாக்கிய அமைப்பாகும். அந்த வகையில் யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்களும் ஒன்று சேர்ந்து யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தினை உருவாக்கி இன்றுடன் 20 ஆண்டுகளாகும். கடந்த கால அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை குறித்த இடங்களுக்கு ஏற்றி இறக்கி சிறப்பான சேவையை ஆற்றியமை இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும். தற்பொழுதும் பாரவூர்தி உரிமையாளர்களுக்கான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான 5ம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பணப்பரிசுகள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கான பணப்பரிசுகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் அங்கத்தவர் மரணத்திற்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றது. இப்படியான பல சிறப்பான சேவைகளை மேற்கொண்டு வரும் சங்கத்தின் 20வது ஆண்டு மலரானது வரலாற்றுச் சான்றாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கூட்டுறவுத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இத்தகைய மலரானது சிறப்பாக வெளிவர அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கயிலாயபிள்ளை சிவகரன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு 1997ம் ஆண்டிலிருந்து தனது சேவையினை கண்ணும் கருத்துமாக ஆற்றிவரும் இவ்வேளை இருபது வருடங்கள் பூர்த்தியடைவதனை முன்னிட்டு வெளியீடு செய்யும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்பட்ட போர்ச்சூழல் காலகட்டத்தில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டவேளை அதனை மக்களுக்கு கிடைத்தற்பொருட்டு துறைமுகங்களுக்கு சென்று அங்கிருந்து பொருட்களை எடுத்து வந்து சேர்ப்பித்தவகையில் அவர்கள் தமது பணியினை சிறப்பாக மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நெருக்குதலான யுத்தசூழ்நிலை காலகட்டங்களிலும் தனது பணியினை திறம்படச்செய்யும் இச் சங்கம் யாழ்ப்பாண மக்களின் மீள் குடியேற்ற கட்டட தேவைகளுக்கான மணலினை மருதங்கேணி பிரதேசத்திலிருந்து எடுத்துவருவதும், தனிப்பட்ட கட்டட தேவைகளுக்கும் தனது பங்களிப்பை இன்றுவரை சிறப்பாக மேற்கொண்டுவருவதும் இங் குறிப்பிடத்தக்கது.

இச்சங்கத்தின் பணி தொடரவும் அவர்களால் வெளியீடு செய்யப்படும் சிறப்பு மலர் சிறந்து பயனுடையதாய் அமையவும், இறைவனைப் பிரார்த்தித்து என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி,

எஸ். முரளிதரன்,
மேலதிக அரசாங்க அதிபர் (காணி)
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக சபையினர்



## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்



## பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க நிர்வாக சபையினர் வரிசையில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு பாரவூர்திச் சங்கத்தினை வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

1990 மற்றும் 2000 ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண குடாநாட்டிற்கான தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டிருந்த காலப்பகுதியில் கப்பல் மூலமாகவே குடாநாட்டிற்கு பொருட்கள் கொண்டு வரப்பட்டது. அக்காலப்பகுதியில் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்து விநியோகிக்கும் பணியினை பாரவூர்திச் சங்கம் சிறப்பாக மேற்கொண்டு பல்வேறு தரப்பினராலும் பாராட்டினைப் பெற்றிருந்தது.

மேலும் மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையில் மணல் விநியோகம் மேற்கொண்டபோதும் மகேஸ்வரி நிதியம் மூலம் மணல் விநியோகம் மேற்கொண்ட காலப்பகுதியிலும் வடமராட்சி கிழக்கிலிருந்து யாழ் மாவட்டத்திற்கான மணல் விநியோகத்தின சீரிய முறையில் மேற்கொண்டு நன்மதிப்பினைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் 2015ம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் வடமராட்சி கிழக்கிலிருந்தான மணல் விநியோகம் பொது அமைப்புகளின் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அம்மணல் விநியோகிப்பினை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தலிற்கமைய சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகின்றமை போற்றுதற்குரியது.

மேலும் யாழ் மாவட்ட பாரவூர்திச் சங்கத்தினால் சமூகம் சார்ந்தும் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றன. வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணப் பொதியினை வழங்கி வருகின்றனர். மேலும் முக்கியமான ஆலயங்களில் உற்சவ காலங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியவர்களுக்கு நீர் ஆகாரத்தை வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்கது.

யாழ் குடாநாட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய செயற்பாடுகளினை முன்னெடுப்பதில் கஸ்டங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் யாழ் மாவட்ட பாரவூர்திச் சங்கம் சிறப்பாக செயற்பட்டு வருகின்றமையை முன்னிட்டு வாழ்த்துக்களினை தெரிவிப்பதுடன் மேலும் சிறப்பாக செயற்பட எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து அமர்கின்றேன்.

க.கனகேஸ்வரன்
பிரதேச செயலர்,
வடமராட்சி கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இருபதாவது ஆண்டு நிறைவு விழா வாழ்த்துமடல்

இலங்கையின் வடபுலத்திலே யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவான பாரவூர்தி உரிமையாளர்களை அங்கத்தவர்களாக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பெரியளவிலான நிறுவனக்கட்டமைப்பினைக் கொண்டுள்ள அமைப்பாகத் திகழ்கிறது.

அங்கத்தவர்கள் தமது கடின உழைப்பின் ஊடாக இச்சங்கத்தினைக் கட்டியெழுப்பியுள்ளார்கள். இந்நிலையிலே சங்கத்தினைக் காலத்துக்குக் காலம் பொறுப்பேற்கும் இயக்குநர்சபையும் அயராத உழைப்பின் ஊடாக அங்கத்தவர்களிற்கு அளப்பரிய சேவைகளைப் புரிகிறது. அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக வருடாந்தம் புலமைப்பரிசில் திட்டங்களையும், உதவு தொகைகளையும் வழங்கி மகத்தான சேவையை ஆற்றுகிறது.

வடபுலத்தில் யுத்தம் தீவிரமடைந்திருந்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உலர் உணவு விநியோகத்தினை இடையூறின்றி மேற்கொள்வதற்கு பெரும்பங்காற்றியுள்ளது. காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களில் கப்பலில் இருந்து பொருட்களைக் கையேற்று விநியோக ஒழுங்கினை மேற்கொண்டுள்ளது. இன்றைய அத்தியாவசிய சேவைகளிலே தன்னார்ந்த நோக்குடனும், சேவை மனப்பாங்குடனும் இன்று வரையிலும் சேவையினைத் தொடர்ந்து வருகின்றது.

எனது சேவைக்காலத்தில் சங்கத்தினால் மேற்கொள்ளபட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்கு தடையின்றியும், காலதாமதமின்றியும் அனுமதிகளை வழங்கியுள்ளதுடன் செயற்பாடுகள் நிறைவேறுவதையும் அவதானித்து வந்துள்ளேன்.

1997ம் ஆண்டிலிருந்து இன்று வரையிலான இருபது வருடங்களைக் கடந்து வந்துள்ள நிலையில் சங்கத்தின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்து அங்கத்தவர்களிற்கு நலத்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன் சமூகநலனில் அக்கறை அதிகம் செலுத்தி விழிப்புணர்வுடனான சேவையை ஆற்றவேண்டுமென 20ம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் கேட்டுக்கொள்வதுடன் நிகழ்வு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

நன்றி

போ.மோகன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்க கட்டட திறப்பு விழாவின் போது (2008)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனமார்ந்த வாழ்த்துக்கள்

எம்முடன் நீண்டகால உறவுகொண்டு சமூகப்பொறுப்புடன் செயலாற்றி உயர்ந்து நிற்கும் தங்களை வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன்.

தங்களின் இருபதாண்டு வினைத்திறனான சேவையை விரும்பியே வாழ்த்துகின்றேன்.

இக்கட்டான காலகட்டத்திலும் இயலுமானவரை விசேட அனுமதிகளுடன் விரைந்தே மக்களுக்கான சேவையாற்றி உயர்ந்துவிட்டீர்கள். அனர்த்த காலங்களில் மக்களுக்கான அத்தியாவசியமான உணவுப்பொருட்களை உரியகாலத்தில் விநியோகித்து பாராட்டுக்களைப் பெற்றதையும் நினைவில் கொள்கின்றேன்.

மக்கள் சேவையே மகேசன் சேவையென போற்றும் தங்களது அர்ப்பணிப்பான சேவை தொடரட்டும். மேலும் ஒவ்வொரு வருடமும் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரங்களை வழங்கி சிறப்பித்தல், பல்கலைக்கழங்களுக்கு அனுமதி பெற்ற மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவித்தல். அத்தோடு மருதங்கேணியில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் கற்றல் உபகரணங்களை வழங்கியமை என்பன உங்கள் சமூகப்பணிகளை எடுத்தியம்புகின்றன.


இச்சிறப்பு மலரானது தங்களது சாதனைகளைத் தாங்கி மலர்ந்து பலவிருட்சங்களை உருவாக்க என்றும் என்வாழ்த்துக்கள்.

க.சுசீந்திரன்
பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## “அளப்பரிய சேவைக்குரிய அர்ப்பணிப்பான அமைப்பு”



இலங்கையின் வடபுலத்திலே யாழ்ப்பாண குடாநாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொண்டிருந்த காலப்பகுதி 1990இற்குப் பிற்பட்ட காலமாகும். அக்காலத்தில் குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வருவதிலும், குடாநாட்டு உற்பத்திகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதிலும் இன்னோரன்ன கஸ்டங்கள் எதிர்கொள்ளப்பட்டது. அரசாங்க அதிபர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற வாகனத் தொடரணிகள் மூலமாக இச்சேவைகள் ஓரளவு திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கு குடாநாட்டில் உள்ள தனியார் பாரவூர்திகள், ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் பாரவூர்திகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டு வந்தது.

இவ் அத்தியாவசிய இடமாற்றல் சேவையினை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன அமைப்பின் மூலம் மேற்கொள்வதே சிறப்பானதாகும் என்பதை உணர்ந்து கொண்ட அரசாங்க அதிபர்கள் கூட்டுறவு அமைப்பை உருவாக்கி அதனூடாக இச்சேவையை இலகுபடுத்த முடியும் என்பதை உணர்ந்து கொண்டமையால் அவர்களின் ஆலோசனைகளிற்கமைவாகவும் தனியார் பாரவூர்தி உரிமையாளர்களின் ஒத்துழைப்புடனும் 24.09.1997 அன்று யாழ்மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு பெற்றுள்ளது.

மிகவும் அர்ப்பணிப்பான சேவையை வழங்கும் இவ் அமைப்பு குடாநாட்டு மக்களின் அத்தியாவசிய சேவைக்கான விநியோக கட்டமைப்பை திறம்பட கையாண்ட அமைப்பாகும். காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களிற்கு கப்பலில் வரும் உணவுப் பொருட்களை ஏற்றியிறக்கும் சேவையில் அயராது பாடுபட்ட அமைப்பு இன்றுவரை மக்களிற்கான மணல் விநியோகத்தினை மேற்கொள்ளும்வரை நிலைத்திருப்பது வரவேற்பிற்குரியது.

சங்கத்தின் அங்கத்தவர்களின் நேர்த்தியான உழைப்பும், அவர்களின் விசுவாசமும் இன்று இருபது ஆண்டுகளை எட்டும்வரை தளம்பவில்லை. அங்கத்தவர்கள் தம்மிடையே உள்ளவர்களைக் கொண்டு தெரிவு செய்யப்படுகின்ற நிர்வாக சபையும் அதற்குத் தலைமை தாங்கும் தலைவர்களும் காலத்திற்கு காலம் ஆற்றும் தன்னலமார்ந்த சேவைகள் சங்கத்தின் நிலைபேறுக்கும் போட்டி அமைப்புக்கள் வலுப்பெறாமல் போனதற்கும் காரணமாக அமைந்தது. தற்போதுவரை கௌரவ சேவையில் இருக்கின்ற இயக்குநர் சபைகளும், அதன் தலைவர்களும் அங்கத்தவர் நலன்சார் திட்டங்களை முன்னெடுப்பதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்கள் வாழ்வாதாரத்ததை கொண்டு நடாத்தக்கூடிய வகையில் முழுநேர உழைப்பினை வெளிக்கொண்டு வருகின்றமை, தமது சங்கத்தால் சேவையைப் பெறுகின்ற பொதுமக்கள் மனங்கோணாத வகையில் பாகுபாடு இன்றி ஒழுங்குமுறைகள் பிறழாமல் சேவையை வழங்குவதில் உள்ள அக்கறை உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

அங்கத்தவர் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் வருடாந்தம் முன்னெடுக்கப்படுவது சிறப்பம்சமே. ஒவ்வொரு வருடமும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்கள் எல்லோரிற்கும் ஊக்குவிப்பு தொகைகளும் பரிசில்களும் வழங்கப்படுவது வரவேற்கத்தக்கது.

இன்று 20வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவது ஒரு சிறப்பிற்குரியது. பல உயிர்களுக்கு உணவளித்த, வாழ்வளித்த இந்த சங்கம் அடைந்த அளப்பரிய நிலையினை வாழ்த்துகின்றேன். விழாக்களில் 20ம் ஆண்டு நிறைவைப் "பீங்கான் விழா" என்றே குறிப்பிடுவார்கள். அது இந்த கூட்டுறவு அமைப்பிற்கு சாலப் பொருந்தும் விழாவாக அமைந்துவிட்டது.

இம்மலர் வெளியீட்டுக்கான வாழ்த்துரை வழங்குவதற்குச் சந்தர்ப்பமளித்த தலைவர், இயக்குநர்கள், பணியாளர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.க.சசிதரன்,
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யாழ் மாவட்டத்தில் நெருக்கடி மிகுந்த காலகட்டத்திலும்**
**தன்னரிய பணியை இனிதுறச்செய்து**
**தன் 20 ஆண்டு சேவையை நிறைவு செய்யும்**
**யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுவுச்**
**சங்கத்தின் சேவையை மெச்சி**
**அவர்களை வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப் பாமலர்**

தமிழ்நிலம் இதனில் வருதுயர் பலவும்
வாட்டிய வேளையிலும்
தன்னிலம் வாழத் தேவையே தமது
சேவை என்றுணர்ந்தே
எமதிடர் தீர்க்கும் வழிவழி பார
ஊர்திகள் முன்வந்தே
ஏற்றியே பொருட்களை இறக்கிடும் பணிகளால்
முக்களின் மனம் கவர்ந்தே
உயர்வுறு பருத்தித் துறைகாங் கேசன்
துறைமுகம் அதிலிருந்தும்
உடன்பொருட் துளையெடுத் தேவந்தும் களஞ்சியப்
படுத்திய திறத்தாலே
எம்மவர் துயரம் தீர்த்தநற் சேவை
தன்னையே தினம் நினைந்தும்
ஏற்றியே உம்மைப் போற்றுகின் றோம்தினம்
வாழிய வாழியவே....

செ. ஜெயக்குமார்,
தலைவர்,
யா.மா.பா.உ.கூ.சங்கம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரவூர்திச் சங்கத்திற்கு துறைமுக சேவை தரப்படாமல் தனியாருக்கு வழங்கியமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




மகேஸ்வரி நிதியத்தினால் அங்கத்தவர்களுக்கான வைப்புப்பணம் ரூ. 5000 சேமிப்புப்பணம் ரூ. 300 தருவதாக கூறி ஏமாற்றியமையை கண்டித்து ஆர்ப்பாட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்**
**கூட்டுவுச் சங்கத்தின்**
**20 ஆண்டு சேவையை வாழ்த்தி வழங்கும்**
**வாழ்த்துப் பாமலர்**

யுத்தக் கொடுமைகள் எம்மை வாட்டிய
வேளையில் மக்கள்பணி
சித்தத் தெழுந்திட நித்தம் தம்முயிர்
துன்னையும் மதியாதே
உத்தம பணியிது உயிர்காக் கும்பணி
ஏன்றே மிகுமதித்தும்
உயர்துறை முகங்கள் பற்பல நாடியும்
உணவுப் பொருட்களையே
நித்தமும் எடுத்து வந்துயர் களஞ்சியம்
தன்னில் சேர்க்கும்பணி
தன்னை சிறப்புடன் ஆற்றிடத் தன்னுயிர்
தனையும் மதியாதே
உத்தம பணிகள் புரிந்த பாரவூர்திச்
சங்கமும் தன்பணியில்
இருபது ஆண்டு சேவையை நினைந்தே
வாழ்த்துகின் றோம்வாழி.

செயலாளர்,
க. செல்வச்சந்திரன்,
யா.மா.பா.உ.கூ.சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவு விழா

"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" எனும் பாரதியாரின் கூற்றுக்கிணங்க சமூகத்திலுள்ள அங்கத்தவர்கள் எல்லோரும் தனிப்பட்ட வேற்றுமைகளை மறந்து மனம் ஒன்றுபட்டு செயலாற்றும்போது ஒற்றுமை உதயமாகின்றது. ஒற்றுமைப் பண்பே கூட்டுறவு இயக்கத்தின் உயிர்நாடி ஆகும். ஒற்றுமை சனநாயக முறையில் நெறிப்படுத்தப்பட்டு செயற்படும்போது கூட்டுறவு இயக்கம் தோன்றுகின்றது. கூட்டுறவு இயக்கம் தன்னுள்ளே பலநூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டுள்ளது. அச்சங்கங்களுக்கெல்லாம் தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் என இருப்பார்கள். அவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக விளங்குவர். இவர்கள் எல்லோரும் அச்சங்கங்களின் எழுச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். பல கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்த அமைப்பு கூட்டுறவு சமாசம் எனப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளே யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் பிரதான இடத்தை வகிக்கின்றது. யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் 1997.09.24ம் திகதி கூட்டுறவு சட்டத்திற்கமைய பதிவு செய்யப்பட்டு இவ்வருடம் 20வது ஆண்டு பூர்த்தி விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளை எடுத்து நோக்கின் ஆரம்பத்தில் இச்சங்கம் துறைமுக விநியோக சேவையில் ஈடுபட்டு பல வருடங்களாக சிறப்பாக சேவை செய்து வந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் சேவையிலும் தம்மை ஈடுபடுத்தி சேவையாற்றியுள்ளது. அத்துடன் இடைப்பட்ட காலத்தில் இராணுவ சேவைக்கும் பங்களிப்பு செய்துள்ளது. மேலும், அரசாங்கத்தையும் திருப்திப்படுத்தும் முகமாகவும் பலசேவைகளை ஆற்றியுள்ளது. தற்போது இடைக்காலத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி மணல் விநியோகம் செய்து வந்துள்ளது. இவ்விநியோகத்தில் பல பாரவூர்திகள் பல கஸ்டங்களைச் சந்தித்து, பாதிப்புக்குள்ளாகி விநியோகத்தில் பலதடைகளும் ஏற்பட்டுவந்தன. பின்பு எமது அரசாங்க அதிபர் அவர்கள் இத்தடைகளை நீக்கி மண் விநியோகம் சீராக நடைபெற எடுத்த பெரும் முயற்சியால் இப்பொழுது மண் விநியோகம் சீராக நடைபெற்று வருவதையிட்டு அரசாங்க அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கத்தவர்கள் கௌரவிப்பு





## கௌரவிப்புகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிற்கு நன்றி தெரிவிப்பதோடு, எமது மக்களின் மண் தேவைகளும் நிறைவு செய்யப்பட்டு வருவதையிட்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைகின்றோம். எல்லாவற்றுக்கும் எமது சங்கத்திலுள்ளவர்களின் கூட்டான செயற்பாடுதான் காரணமாகும். ஆகவே, எமது பாரவூர்திச் சங்கம் தொடர்ந்து தமது சேவையினைச் செய்து எழுச்சி பெற எல்லோருடைய ஒத்துழைப்பும் மிக அவசியம்.

ஆகவே, மேலும் மேலும் எமது சங்கம் வளர்ச்சி அடைந்து மக்களுக்கும், எமது நாட்டிற்கும் சேவையை வழங்க இறையருள் வேண்டி எனது ஆக்கத்தினை நிறைவு செய்து கொள்கின்றேன்.

நன்றி.

திரு.செ.இராசசேகரம்
அ.இல - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னிறைவான சேவையுடன் இருபதாவது அகவையை நோக்கி எமது சங்கம்....!

சாதி மத பேதமின்றி சாதனைகள் நீ புரிந்து
சமயநெறி பூசலின்றி சாமர்த்தியம் நீ காண
சரித்திரத்தில் சரிநிகராய் போராடும் எம் பாரவூர்திச் சங்கமதில்
ஒற்றுமையாய் இணைந்திடுவோம் ஓர் குலமாய்

சிறு விதையாய் வீழந்து விருட்சமாய் ஓங்கி நிற்கும்
எம் சங்கம் தனில் ஒன்றாய் கால் பதித்து
கூட்டுறவை வலுவாக்க இணைந்திடுவோம் விரைவில் ஒன்றாய்
சொல்லொணா இன்னல்கள் இடையே சேவை பல புரிந்திடும்
எம் அன்னையவள் கரங்களில் ஒன்றாய் அணிதிரள்வோம்

போராட்டங்கள் பல கண்டு ஜனநாயக நீருற்றில் அங்கமென நீ திகழ
சமத்துவ நிலை நின்று சகலரும் ஒன்றிணைந்து
கூட்டுறவே நாட்டுயர்வாய் கூடி நிற்போம் தரணியில் யாம்
அங்கத்தவர் சேம நலம் நீ காக்க சேர்ந்திடும் எம் கரங்கள்
இங்கு வாழ்வுதனை வளமாக்க உன் சேவை நல்கிடுவோம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"
"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"
அணிதிரள்வோம் அவனியிலே அடைந்திடுவோம் உன் இலட்சியங்கள்
ஏட்டிக்குப் போட்டியாய் போட்டியிடும் நிறுவனங்கள்
ஏணிவைத்து ஏறினாலும் எம் சங்கத்தை எட்டிவிடார்

கவர்ச்சியுடன் கரை இறங்கி இருபதாம் அகவையில் மிளிரும் எம்
சங்கத்தின் புகழ் பரவ கைகொடுப்போம் நாமெல்லாம்
எம் காலில் நாம் நின்று எம் பிணி போக்கிடவே உன்சேவை செய்திடுவோம்
தன்னிகரில்லாத் தரணியிலே உன் வலிமை உணர்த்திடுவோம்
உலகமெலாம் அகமகிழ்வாய் உன்னுடன் ஒன்றிணைய
ஒற்றுமையாய் குரல் கொடுப்போம்....நீ வாழிய வாழியவே !

பணியாளர்
க. அனுரேகா
யா.மா.பா.உ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்ட நிகழ்வுகளின் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் உள்ளத்திலிருந்து..........

யாழ் மாவட்ட பாரவூர்தி சங்கமானது தனது 20வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு விழாவாகவும் அதன் பணிப்பாளர் சபை, அங்கத்தவர்கள், பணியாளர்களின் முயற்சியின் பலனாக 20 வருட சேவையை ஒரு மலர் வடிவத்தில் வெளியிடுவதற்கும் எடுத்த முயற்சியை, எமது சங்கத்தின் ஆரம்ப கால அங்கத்தவர்கள் யாழ் மாவட்டத்தில் ஒரு பாரவூர்தி சங்கத்தினை உருவாக்கி வெற்றிக்கொடி ஏற்றவேண்டும் என்பதற்கமைய எல்லா அங்கத்தவர்களாலும் சேர்ந்து உருவாக்க ஈடுபட்ட ஆரம்ப கால அங்கத்தவர்களை வரவேற்றுகொண்டு எமது சங்கமானது 1997.06.23 அன்று ஒரு ஆலமரத்தடியில் சங்கமாக ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பாக 1997.09.24ம் திகதி யாழ் மாவட்ட கூட்டுறவு திணைக்கள கூட்டுறவு ஆணையாளரிடம் பதியப்பட்டது. அன்று தொடக்கம் எமது சங்கத்தின் மாபெரும் முயற்சியின் காரணமாக அங்கத்தவர்களுக்கு பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்களையும் செயற்பாடுகளையும் ஆற்றி வந்தது. யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக பாதைபூட்டிய காலத்தில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட யாழ் மாவட்டத்திற்குரிய உணவுப்பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், அனைத்துப்பொருட்களையும் அக்காலத்தில் இயங்கிய பருத்தித்துறை துறை முகத்திலிருந்து அரச, தனியார் களஞ்சியங்களுக்கு வழங்கி மாபெரும் சேவையை வழங்கியது என்பதை என்றும் மறக்கமுடியாது.

அப்போதைய சூழ்நிலையில் யாழ் மாவட்டத்தில் ஊரங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இருந்தும் யாழ் அரச அதிகாரிகளின் வழித்துணையுடன் மாலை 7.00 மணிக்கு பின்பு உணவுப்பொருட்களை ஏற்றிக்கொண்டு நாவற்குழியை சென்றமையும் பாரவூர்தி சாரதிகள் நாவற்குழி களஞ்சியத்தைச் சென்றதும் வெளியில் செல்லமுடியாத காலநிலையிலும், உணவில்லாத சூழலிலும், படுத்துறங்குவதற்கு தடையாக நுளம்புக்கடியின் சிரமத்திலும் எமது சேவையை செய்து வந்துள்ளார்கள்.

இதற்கு மேலாக, அதிகமான கப்பல்கள் வரத்தொடங்கியபோது காங்கேசன்துறை, மயிலிட்டி, காரைநகர் போன்ற துறைமுகங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்குரிய உணவுப்பொருட்களை இறக்கிய பின் விளைபொருட்களை கொழும்புக்கு ஏற்றி சேவைகளையும் செய்து வந்து அப்போதைய யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

அங்கத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட சிறிய தொகையை வைத்து சங்கம் தனக்கென ஒரு வேரை மண்ணில் ஊடுருத்திச் சென்ற மரம் போல நிரந்தர இடத்தை தேடிக்கொண்டு மாபெரும் வளர்ச்சியை கண்டது. இக்காலத்தில் சுயநலமிக்க பொறுப்புணர்ச்சியற்றவர்கள் எமது சங்க செயற்பாடுகள் அனைத்தையும் "கூழ்ப்பானைக்குள் பூனை விழுந்தாற்போல" இடையூறு ஏற்படுத்தினார்கள். அந்த காலத்தில் எமது அங்கத்தவர்களால் கடும் நிதானமாக மேற்கொள்ளப்பட்ட மணல் சேவையை, மகேஸ்வரி நிதியத்திடம் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களை வலுக்கட்டாயமாக ரூ.5000 வைப்புப் பணமாக செலுத்தி வைக்கப்பட்டு எமது சங்கத்திடமிருந்த மணற்சேவையை மகேஸ்வரி நிதியம் உள்வாங்கி எமது அங்கத்தவர்களின் தொழில் வாய்ப்பை படிப்படியாக குறைத்து முற்றுமுழுதாக தொழிலை இழக்க வைத்தனர். தங்களிடம் இருந்து தொழிலை விடும்பட்சத்தில் அங்கத்தவர்களுடைய வைப்புப்பணம், சேமிப்புப்பணம் என்பவற்றை திருப்பித் தருவதாக உறுதி அளித்தும் திருப்பித்தராத சந்தர்ப்பத்திலும் பல போராட்டங்களை நடாத்தியுள்ளோம் என்பதனை யாவரும் அறிவீர்கள்.

இச்சங்கத்தில் 11.11.2012ல் தலைமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான் என்னுடன் பொறுப்பேற்ற நிர்வாக சபையினருடன் அங்கத்தவர்களின் தொழில்வாய்ப்பிற்காக யாழ் மாவட்டத்திற்கு வருகைதரும் தென்னிலங்கை அரசியல்வாதிகள், வடஇலங்கை அரசியல்வாதிகள் வரை சென்று அங்கத்தவர்களின் நிலைமையினை தெரியப்படுத்தியதன் பலனாக அரசாங்க அதிபர் அமைச்சர்களிடமிருந்து மாபெரும் ஒத்துழைப்பைப் பெற்றேன். முன்னாள் கூட்டுறவு அமைச்சர் அவர்களிடமும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரினதும் ஒத்துழைப்பை மனமுருகப்பெற்று மணல் சேவையினை மேற்கொண்டு வருவது யாவரும் அறிவீர்கள்.

எமது சங்க சேவை மூலம் "சிறுதுளி பெருவெள்ளம் போல்" அங்கத்தவர்களிடமிருந்து சேர்க்கப்பட்ட தொகையை ஒரு சிறிய சிறப்பான நடவடிக்கையாக 2013ஆம் ஆண்டிலிருந்து எமது அங்கத்தவர்கள் மரணத்திற்கான நிதியுதவியாக குறிப்பிட்ட தொகையை வழங்கி வருகின்றோம். எமது சங்க அங்கத்தவர்களினது பிள்ளைகளுக்கு தனது தந்தையின் சங்கத்திலிருந்து கௌரவப்படுத்துமுகமாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கும் ஆண்டுப் பொதுக்கூட்ட நிகழ்வில் கௌரவப்படுத்துவதுடன் மற்றும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் நிதியுதவிகளையும் மனமுவந்து வழங்கி வருகின்றோம். இதற்கு மேலாக 2016ம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவர்களின் கல்வி பயிலும் பிள்ளைகளின் விபரங்களின் பதிவினை மேற்கொண்டு வருட இறுதியில் அடுத்த ஆண்டிற்கு தேவையான அனைத்து கற்றல் உபகரணங்களையும் வழங்கி வருகின்றோம்.

யாழ் மாவட்ட பாரவூர்திச் சங்கம் ஆனது ஆரம்ப யுத்த காலம் தொடக்கம் மாபெரும் சேவைகளை பல இடர்களுக்கு மத்தியில் சிறப்புற செய்து வந்தது. இனிவரும் காலங்களிலும் இவற்றை விடவும் சிறப்பாக செய்து அங்கத்தவர்களை சமூக மேம்பாட்டிற்கு உழைத்து "கூட்டுறவால் நாட்டுயர்வு" என்பது போல் சங்கம் சிறப்புற சேவையாற்றும் எனவும், தெரியப்படுத்தி வாழ்த்துகின்றேன்.

செ.ஜெயக்குமார்
தலைவர்
யா.மா.பா.உ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்திற்கான சேவைத்தர வரிசையில் பெறப்பட்ட விருதுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரவூர்திச் சங்கம் உருவான வரலாறு



1996ம் ஆண்டு இறுதிப் பகுதியில் யாழ் குடாநாடு பூரண அரச கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. அப்போது உணவுப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் யாழ் மாவட்ட அரச அதிபர் திரு.பத்மநாதன் அவர்கள் அரச அதிகாரிகளிடம் கொழும்பிற்கு தொடர்பு கொண்டு அங்கிருந்து கப்பல்கள் மூலம் பொருட்கள் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்தார். அப்படி கப்பல் மூலம் வரும் பொருட்களை காங்கேசன்துறை இறங்கு துறையில் இறக்கி பாரவூர்திகள் மூலம் அரச களஞ்சியசாலைகளுக்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகளையும் ஏற்பாடு செய்திருந்தார். இச்சேவையானது தற்போது அல்லாது குறைந்தளவு பாரவூர்திகளே சேவையிலீடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

1997ம் ஆண்டு முற்பகுதியில் நூறு நூற்றிப்பத்து பாரவூர்திகளே சேவையிலீடுபட்டு வந்தது. இந்நிலையில் 16, 17 பாரவூர்திகள் மட்டும் ஒவ்வொரு நாளும் சேவையில் ஈடுபடுவதை காணக்கூடியதாக இருந்தது. இது எப்படிச் சாத்தியமாகின்றது, என்பதை ஏனைய சக பாரவூர்திச் சாரதிகளுடன் ஆராய்ந்தபோது அவையாவும் பனைமரத்தைச் சுற்றிய பல்லிகள் என்று அறியப்பட்டது.

அதன் பின்பு பாதிக்கப்பட்ட சாரதிகளிடம் கலந்துரையாடி எமக்கென்று ஒரு சங்கத்தை உருவாக்கி சங்க மூலம் வாகன அணிக்குரிய பட்டியலை நாமே தயாரித்து கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதனை ஒரு உரிமையாளரும் சாரதியுமானவர் நடைமுறைப்படுத்த முன்னின்றார். இதன்போது ஒரு சிக்கல் ஏற்பட்டது. என்னவெனில் சம்மதம் தெரிவித்தவர்களில் பெரும்பாலானோர் வெளிப்படையாக செயலாற்ற பின் வாங்கினர். காரணம் வாகன அணியைக்கொண்டு நடத்தும் அரச அலுவலருடன் கசப்பு ஏற்படுவதை விரும்பவில்லை.

இதற்காக இதை நடத்துவதற்கு முன்வந்தவர் சோர்ந்து பின்வாங்காது தன்னுடன் உடனிருந்த எட்டு நண்பர்களுடன் சேர்ந்து தற்போது செயற்பட்டு வரும் சங்கத்தின் அத்திவாரமாக 23.06.1997ல் அங்குரார்ப்பண கூட்டம் வாகன அணி பதிவு செய்யும் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீரமானிக்கப்பட்டது. அதற்கான விளம்பரம் ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டது. (விளம்பர இல. 47924.)

நடைபெற்ற கூட்டத்தில் திரு.சி.வேதாரணியம் தலைவராகவும், திரு.சி.தில்லைநடராசா செயலாளர், திரு.செ.மரியநாயகம் பொருளாளராகவும் மேலும் 06 உறுப்பினர்கள் நிர்வாக உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு சங்கம் இயங்க ஆரம்பித்தது. அதன்போது சங்கம் அமைப்பதற்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோள்கொடுத்தவர்களில் ஒருவரான திரு.க.சிவலிங்கராசா என்பவர் தனது சாரதித் தொழிலை துறந்து அணிப்பட்டியல் பதிவாளராக பொறுப்பேற்றார். இவரை நாம் பாராட்ட வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்க வேண்டும். காரணம் ஒரு பதிவுக்கட்டணம் 10/- மட்டும் அறவிட்டு அதை அவர் ஊதியமாக ஏற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு மாதம் சென்றபின் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டதில் ஒரு பிரேரணை முன்வைத்தார் சங்கம் உருவாகக் காரணமானவர். சங்கத்தைக் கூட்டுறவுச் சங்கமாக்க வேண்டிய அவசியத்தைவலியுறுத்தி 1996ம் ஆண்டு நடந்த சங்க நிதிக்கு நடந்த விடயங்களைக் கூறினார். அதன்பின்பு இத்தீர்மானத்திற்கு அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஆதரவு தெரிவித்தனர்.

இதன் பின்பு கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சென்று ஆணையாளரிடம் ஆலோசனை கேட்டபோது எப்போதும் உரிமையாளரும் சாரதிகளும் ஒரே சங்கமாக இருக்க முடியாது என்பதை சில உதாரணங்களுடன் விளக்கமளித்தார். அப்போது இவ்வாலோசனைக் கலந்துரையாடலில் சக சாரதிகளும் கலந்து கொண்டதினால் அவரது ஆலோசனையை எவ்வித மறுப்பும் தெரிவிக்காது அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அடுத்து சில நாட்களின் பின்பு சங்கத்திற்கொரு யாப்பு சாரதிகளின் ஆலோசனையையும் பெற்று தயாரிக்கப்பட்டது ஒரு சிறப்பான அம்சமாகும். அத்துடன் சாரதிகளில் பலரும் எமக்கு எதுவித சங்கமும் வேண்டாம் எமது சேவைக்கு இடையூறு ஏற்படாது தமக்கு ஆதரவாக நடந்து கொள்ளும்படி வினயமாகக் கேட்டுக்கொண்டது மிகவும் குறிப்பிடவேண்டிய அவசியமாகும்.

யாப்புக்கள் யாவும் தயாரித்து கூட்டுறவு ஆணையாளரிடம் கொடுத்து 24.09.1997ல் யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு பதிவு இலக்கமும் வழங்கப்பட்டது. "தனியார்" பாரவூர்தி எனப் பெயரிட்மைக்கான காரணம் அப்போது ப.நோ.கூ.சங்க பாரவூர்திகளும் இணைந்து துறைமுக சேவைகளை செய்த காரணத்தினாலாகும்.

பின் நாளில் அவர்களது சேவை படிப்படியாக குறைந்து செயற்படாது போனபின்பு "தனியார்" என்ற பதம் நீக்கப்பட்டு யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடன் இயங்கிவருகின்றது. இச்சங்கம் ஆரம்பித்த காலம் தொட்டு தாரக மந்திரமாக "அனைவரிற்கும் சம தொழில் வாய்ப்பு" என்ற கொள்கையில் இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமுகாமையாளர்
பி. கஜேந்தினி
யா.மா.பா.உ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தினால் மேற்கொள்ளபடும் துறைமுக, மணல் சேவை









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கூட்டுறவுத் துறையானது வடமாகாண மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆற்றுகின்ற பங்களிப்பு

கூட்டுறவு என்பது மக்களால் அவர்களின் சமூக பொருளாதார தேவைகளுக்காக உருவாக்கப்பட்டு அம்மக்களினாலேயே நிர்வகிக்கப்படும் ஜனநாயக அம்சங்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பாகும். உலகில் முதன்முதலில் இங்கிலாந்தில் 19ம் நூற்றாண்டில் கூட்டுறவு இயக்கம் முக்கிய கொள்கையின் அடித்தளத்தில் தோற்றம் பெற்றது. ஆனாலும் இலங்கையில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் கூட்டுறவுத்துறை தோற்றம் பெற்றது. உலக நாடுகளில் கூட்டுறவுத் துறை தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தமைக்கு அந்நாடுகளில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகளே காரணமாக அமைந்தது.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக பெரும் அழிவுகளை சந்தித்ததுடன் அப்பிரதேச மக்களின் பொருளாதாரம், கல்வி ஆகிய விடயங்களில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை கூட்டுறவுத் துறையில் தனக்கென ஒரு பெருமைமிகு கூட்டுறவு வரலாற்றை கொண்டமைந்த வடமாகாணமானது கடந்த கால யுத்தத்தின் காரணமாக சிதறி சின்னாபின்னமானது. எனவே கடந்த கால அனர்த்தங்களினால் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ள வடமாகாண மக்களின் பொருளாதார பிரச்சனைகளை கூட்டுறவுத் துறையூடாக அபிவிருத்தி செய்ய வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு பிரதேச மக்களும் அப்பிரதேசம் கொண்டுள்ள வளங்களின் அடிப்படையிலேயே தமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். வடமாகாணம் என்பது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். இம்மாகாணமானது சிறந்த விவசாய நிலங்களையும் சிறந்த கடல் வளங்களையும் கொண்டமைந்த ஒரு பிரதேசமாகும். வடமாகாண மக்களின் பொருளாதாரத்தில் 60%ற்கு மேற்பட்ட பங்களிப்பை விவசாய துறையும் மீன்பிடித்துறையுமே செய்து வந்துள்ளது. ஆனால் கடந்த கால அனர்த்தங்களினால் அத்துறைகளில் ஏற்பட்ட பாதிப்பு வடமாகாண பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. எனவே போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் வடமாகாண மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது அனைவரினதும் கடமையாகும். எனவே பொருளாதார அபிவிருத்தி என்ற நோக்கத்தினை "கூட்டுறவு" என்ற மெய்ப்பொருளாக இட்டுச் செல்வதன்மூலம் உச்சபலனை பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில் இன்னைய காலகட்டத்தில் பின்வரும் கூட்டுறவு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

1. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்
2. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள்
3. கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
4. சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்
5. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்
6. பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்.
7. புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
8. சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
9. சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
10. வாழைக்குலை உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள்
11. கூட்டுறவு வைத்தியசாலைகள்
12. மட்பாண்ட உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள்
13. பாடசாலை மட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

மேற்கூறப்பட்ட சங்கங்கள் ஒவ்வொரு தொழில் ரீதியாக உருவாக்கப்பட்டு அத்தொழில் புரிபவரின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்து வருகின்றது.

வடமாகாணத்தில் அரசதுறை, தனியார் துறை போன்றே கூட்டுறவுத் துறையும் ஒரு பாரிய பணித்தொகுதியை கொண்டமைந்த ஓர் துறையாகும். இதில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களானது பாரிய பணித்தொகுதியையும் பாரிய மூலதன வளத்தையும் கொண்ட பலம் மிக்க ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பிலே நுகர்ச்சிப்பகுதி, எரிபொருள் நிரப்பு நிலையங்கள், கிராமிய வங்கிகள், கோப் சிற்றிகள், உணவகங்கள், அரிசி ஆலைகள் போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு அமைப்பு ஆகும். இப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாரிய பணித்தொகுதி பணியாற்றுவதன் மூலம் வேலையில்லா பிரச்சனை அளவு குறைக்கப்படுவதுடன் அப்பணியாளர்களின் வேலைப் பாதுகாப்பானது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டம், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், தொழிற்சட்டம் என்பவற்றூடாக பேணப்பட்டு வருகின்றது. அத்துடன் உரிய முறைப்படி உரிய காலத்தில் வேதன ஏற்றம், ஏனைய படிகள் வழங்கப்படுவதுடன் தகமைக்கேற்ற பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றது. அடுத்து விவசாயிகளின் உற்பத்திக்கு விலைத்தளம்பலற்ற நியாயமான விலையினை பெற்றுக் கொடுக்கின்றது. அத்துடன் கிராமிய வங்கியூடாக இலகுவாக குறைந்த வட்டிக்கு கடன் வழங்குவதன் மூலம் அப்பிரதேச மக்களின் மூலதன பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடுத்து பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களை எடுத்து நோக்கின் தனது அங்கத்தவரின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பைச் செய்து வரும் ஒரு கூட்டுறவு அமைப்பாகும். அங்கத்தவர்களின் உற்பத்தியை நியாய விலையில் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகின்றது. அத்துடன் இச்சங்கங்கள் பாரிய வெல்ல உற்பத்தி சாலைகளை உருவாக்கி தரமான பனை வெல்லங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றது. இதன் மூலம் அங்கத்தவர்களுக்கு பாரிய அனுகூலங்கள் கிடைக்கின்றது. அத்துடன் பனைசார் உற்பத்திப பொருட்களை தனது அங்கத்தவருடாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதன் மூலம் குடிசைக் கைத்தொழிலானது சற்று முன்னேற்றமடைந்துள்ளமை கண்கூடு. இன்றைய காலகட்டத்தில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் போத்தற்கள் உற்பத்தி மூலம் அதிக இலாபத்தை பெற்றுவருவதுடன் அங்கத்தவரின் உற்பத்தி வீண்விரயமடைவது தடுக்கப்படுவதுடன் அவர்களின் வருமான மட்டத்தினையும் அதிகரிக்கச் செய்கின்றது.

அடுத்து கடற்தொழிற் சங்கங்களை எடுத்து நோக்கின் கடற்தொழிலாளர்களின் உற்பத்திக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதுடன் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கடன்களை வழங்குவதன் மூலம் கடற்தொழிலாளர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகின்றது. இதுபோலவே ஏனைய கூட்டுறவு அமைப்புக்களும் தமது துறை சார்ந்து தமது அங்க்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தன்னாலான பங்களிப்பை ஆற்றி வருகின்றது.

எனவே, எமது மக்களினதும் பிரதேசத்தினதும் நிலையான அபிவிருத்திக்கு கூட்டுறவு துறையின் தலையீட்டின் மூலமே சிறந்த தீர்வினை பெற்றுக் கொள்ள முடிகின்றது.

திரு.ம.கபிலன்
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவில் காலடி



எமது பாரவூர்திச் சங்கமானது 1997ம் ஆண்டு கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவுச் சங்கமாக பதிவு செய்யப்பட்டது. இச்சங்கத்தின் ஆரம்பத் தலைவராக திரு.ச.வேதாரணியம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 09 உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர் சபையைக் கொண்டு இயங்குகின்றது. நானும் இச்சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களாக இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இச்சங்கத்தை பதிவு செய்வதற்கு அப்பொழுதிருந்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.சண்முகநாதன் அவர்கள் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார். தொடர்ந்து எமது சங்கத்தின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் எமக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் வழங்கியிருந்தார். சங்கத்தின் 2வது தலைவராக இருந்த திரு.வீ.குமாரசாமி அவர்கள் கூட்டுறவுச் சங்கமாக பதிவு செய்வதற்கு முழுமைக்காரணமாக இருந்தார். எமது சங்கத்தை சரியான பாதையில் வழிநடாத்திய பெருமை அவரையே சாரும் அவருடைய காலத்திலேயே அங்கத்தவர்களுக்கான சேமிப்புத்திட்டம் உருவாக்கப்பட்டது. அவர் மிகுந்த தற்துணிவுடன் செயற்பட்ட தலைவராவார். இச்சங்கத்திற்காக இரவு பகலாக அர்ப்பணித்து செயற்பட்டமையால் நோயதிகரித்து தனது கால்களையே இழந்தவர். எமக்கெல்லலாம் வழிகாட்டியாக விளங்கிய அவர் சங்க வரலாற்றில் மறக்கமுடியாதவர்.

தொடர்ந்து திரு.சி.சுந்தரலிங்கம் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார். அதன் பின்பு மீண்டும் திரு.வீ.குமாரசாமி அவர்கள் தலைமை தாங்கினார். இன்று அவர்கள் எம்மோடு இல்லாதிருந்தாலும் அவருடன் இணைந்து செயற்பட்ட எல்லாரையும் 20 ஆண்டு நிறைவு விழாவிலே நினைவு கூறுகின்றோம்.

மேலும், 2002ம் ஆண்டு இச்சங்கத்திற்கு என்னைத் தலைவராக தெரிவு செய்திருந்தார்கள். இக்காலம் சவால்கள் நிறைந்ததாக இருந்தது. போர் சூழல் இருந்த காலத்திலிருந்து அமைதிச் சூழல் இருந்த காலம். யாழ் மாவட்டம் ஒரு நிர்வாக கட்டமைப்பிலும் வன்னி மாவட்டம் வேறொரு நிர்வாக கட்டமைப்பிலும் இருந்த காலமாகும். எமது சங்கமானது இறங்குதுறைச் சேவையை நம்பியே செயற்பட்டுக் கொண்டிருந்தது. இக்காலத்தில் அச்சேவையை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பொருட்கள் ஏற்றியிறக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இதனால் அங்கத்தவர்களுக்கும் சங்கத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனை எதிர்த்து நாம் பருத்தித்துறை இறங்குதுறை வாசலிலே அகிம்சை வழிப்போராட்டத்தை ஆரம்பித்து எமது எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். இதனால் மீண்டும் அந்தசேவை எமக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டது. தரைவழிப்பாதை திறக்கப் பட்டமையால் கப்பலில் இருந்து பொருட்களை ஏற்றியிறக்கும் பணி முழுமையாக இல்லா மல் போனது. இதனால் அங்கத்தவர்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் போனது. இச்சந்தர்ப்பத்தில் நாம் வன்னி நிலப்பரப்பிலிருந்து ஆற்றுமணல் ஏற்றியிறக்குவதற்கான பெரும் முயற்சியை மேற்கொண்டு அச்சேவையைப் பெற்றுக்கொண்டோம். இதனால் அங்கத்தவர்களும் சங்கமும் வருமானத்தைப் பெற்றுக்கொண்டது. இது சங்கத்தின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் வீ. குமாரசாமி அவர்களின் ஞாபகார்த்த உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்திய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்காலம் ஆரம்பிக்கப்பட்ட நேரமாகும். இக்காலத்தில் சங்கம் தனக்கான பாரவூர்தியை புதிதாக கொள்வனவு செய்திருந்தது. மீண்டும் போர்ச்சூழல் உருவாகியபோது இறங்குதுறைச் சேவை எமக்குக்கிடைத்தது. இதனால் சங்கம் நல்ல வருமானத்தைப்பெற்றதோடு குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றியிறக்கும் சேவையை மிக நல்ல முறையில் செய்து அனைவரினதும் பாராட்டைப்பெற்றது. சங்க அங்கத்தவர்களும் நல்ல வருவாயைப் பெற்ற காலமாகும்.

அத்துடன் மணல் சேவையும் எமக்கு வழங்கப்பட்டது. இதற்கு அப்பொழுது இருந்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கணேஸ் ஐயா அவர்களின் ஒத்துழைப்பு அளப்பரியது. அவர் எமது சங்கத்திற்கு ஆலோசகராவும் தந்தையாகவும் இருந்து செயற்பட்டவர். எச்சந்தர்ப்பத்திலும் எமக்கான குரல் கொடுக்கும் நல்ல மனிதராக இருந்துள்ளார். இக்காலத்தில் சங்கத்திற்கான காணி கட்டடம் பல இலட்சம் ரூபாவில் கொள்வனவு செய்யப்பட்டது. அரச அதிபர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டமை பெருமையளிக்கின்றது. சங்கம் 2002 தொடக்கம் 2010 வரை பாரிய இலாபம் பெற்றிருக்கின்றது. இதற்குச் சான்றாக எமது கணக்கறிக்கைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். இக்காலத்தில் அங்கத்தவர்கள் நல்ல வருமானத்தைப் பெற்றதோடு ஓய்வின்றி தொழில் செய்த பொற்காலம் ஆகும். ஆனால் 2009ற்குப்பின்னர் போர் நிறைவடைந்த காலத்தில் எமக்கு தொழில் இழப்பு படிப்படியாக ஏற்பட்டது. இது எனது தலைமைக்கேற்பட்ட பாரிய சவாலாகும். இறங்குதுறைச் சேவை இல்லாமல் போனமையால் மணல் சேவையை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மணல் சேவையும் எமது கையைவிட்டு போகின்ற நிலை ஏற்பட்டது. இதற்கு என்மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் உண்மையில் எமது சங்கத்திற்காகவும் அங்கத்தவர்களுக்காகவும் இச்சேவையை தொடர்நது செய்வதற்கு பல விட்டுக்கொடுப்புக்களுடன் முயற்சிகளை மேற்கொண்டேன். யாரிடமோ அதற்கான அதிகாரம் இருந்ததினால் என்னுடைய முயற்சியும் நம்பிக்கையும் தோல்வி கண்டது. ஆனால் இன்று அப்படியான சூழல் இல்லை. நான் தலைமையேற்ற காலப்பகுதியில் என்னுடன் சேர்ந்து உழைத்த இயக்குநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எனது காலப்பகுதிக்கு பின்வந்த தலைவர்கள் நிர்வாகிகள் செயற்பாட்டிற்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்துணிவுடன் சங்கத்தை வழிநடாத்திக் கொண்டிருப்பதையிட்டு மகிழ்சியடைகின்றேன். மீண்டும் மணற்சேவையை பெற்றமை பாராட்டுக்குரியது. நம்பிக்கை முயற்சி எப்போதும் வெற்றியைத் தரும். அதற்கு எமது சங்கம் உதாரணமானது என்பதனைக் கூறி தொடர்ந்து எட்டு ஆண்டுகள் தலைவராக செயற்படுவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அரச அதிகாரிகள் மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு சங்கம் 20வது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு நடாத்தப்படும் விழாவில் இம்மலர் வெளியிடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைவதோடு இன்னும் பல ஆண்டுகள் இச்சங்கம் தனது நிறைவான சேவையை செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

இ.அரிகரன்,
முன்னாள் தலைவர்,
யா.மா.பா.உ.கூ.சங்கம்.

"கூட்டுறவே நாட்டு உயர்வு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை கூட்டுறவில் யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் ஜனநாயக ரீதியில் ஒன்று சேர்ந்து தமது தொழில் வளமானதாகவும், பலமானதாகவும் தமக்கென ஒரு அடையாளத்தை பெறும் நோக்குடன் ஏனைய துறைகள் கூட்டுறவில் பதிவு செய்து தம்மை மெருகூட்டுவதுபோல் தாமும் மிளர வேண்டும் என்ற பாரவூர்தி உரிமையாளர் ஆன சிந்தனைவாதிகள் கூட்டுறவின் கொள்கைகள், விதிகள், சட்டங்கள் என்பவற்றை ஏற்று 1997ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ம் திகதி தம்மை கூட்டுறவில் பதிவு செய்து 20 வருடத்தையடைந்துள்ளனர். இப்பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ் மாவட்ட அரச செயலர் பிரிவு பகுதிகளை உள்ளடக்கிய பளை வரை தனது எல்லைப்பரப்பை அமைத்த தனி ஒரு சங்கமாகும். இப்பகுதியில் வசிக்கும் பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவின் மூலம் தமக்கென அமைத்த யாப்பின் பிரகாரம் ரூ.1000 பங்குப் பணத்தை செலுத்தி தம்மை அங்கத்தவராக இணைத்தனர். இன்று வரை இச்சங்கத்தில் 1192 அங்கத்தவர்கள் இணைந்துள்ளனர்.

ஆரம்பத்தில் வடபகுதியில் யுத்தசூழ்நிலைக்கேற்ப வாடகைக் கட்டிடத்தில் இயங்கி 2008ம் ஆண்டு தமது அயராத உழைப்பினை கூட்டுறவில் இணைந்த இலாபத்தில் இருந்து நிரந்தர காணி கட்டிடத்தை வடபகுதியில் அமைந்துள்ள கோண்டாவில் பதியிலே வாங்கி யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயருடன் தலைமைக் காரியாலயத்தை அமைத்து கூட்டுறவில் தனது பணியை மேற்கொள்கின்றனர். இச்சங்கம் தனது அங்கத்தவர்களின் பொருளாதார சமூக மேம்பாட்டுக்கு உழைக்கும் கொள்கையை கொள்கையாகக் கொண்டு சங்கம் இயங்கும் பரப்பில் சமூக நலன்களுக்கு உதவுவதுடன் அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி அங்கத்தவர்கள் அல்லாதோரினதும் சமூக கலாச்சார பொருளாதார விருத்திக்கும் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இக்கொள்கையை கடைப்பிடிக்கும் இச்சங்க அங்கத்தவர்கள் தமக்கென யாப்பின் பிரகாரம் தம்மத்தியிலிருந்து 09 பேர் கொண்ட 04 பதவியுடைய நிர்வாக சபையை அமைத்து நிர்வாகத்தை நிர்வகிப்பதற்கும் பணிகளைப் புரிவதற்கு கூட்டுறவு மேற்பார்வையின் கீழ் அமைந்த பணித்தொகுதியையும் கொண்டு தமது துறையை மேற்கொள்கின்றனர். இவ்வாறு அங்கத்துவம் பெறும் அங்கத்தவர் ஒருவர் எத்தனை ரூ.1000 பங்குகளையும் கொள்வனவு செய்யமுடியும். ஆனால், வாக்களிக்கும் உரிமை ஒரு அங்கத்துவமேயாகும். ஒரு அங்கத்தவராக சங்கத்தில் பிரவேசம் செய்யும்போது பிரவேச பணத்தை செலுத்தவேண்டும். இப்பணம் சங்க வருமானம் ஆகும். ஒரு பங்கினை கொள்வனவு செய்து பதிவு செய்யப்பட்ட பாரவூர்தி மாற்றம் செய்ய வேண்டியிருப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்திற்குள்ளான பாரவூர்தியை பதிவதற்கு பதிவுக்கட்டணமாக ரூ.100 செலுத்த வேண்டும். இவ்வாறு பங்கினை கொள்வனவு செய்து அங்கத்துவம் பெறும் அங்கத்தவர் ஒரு வருடத்தின் பின்னரே முழுமையான அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்டு பொதுச் சபையில் பங்குபற்றி வாக்களிக்கும் உரிமையையும், நிர்வாக தெரிவுக்கும் உட்படுத்தப்படுவர்.

இவ்வமைப்பில் அமைந்த இச்சங்கம் நாட்டின் எப்பாகத்திலும் பாரவூர்தி சேவை தொழிலைப்பெற்று சமவாய்ப்பில் அங்கத்தவர்களுக்கு தொழில் வழங்கல், அங்கத்தவர் தொழில் விருத்திக்கு முற்பணம் தேவைப்படுமிடத்து முற்பணம் வழங்கல், தொழில் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து தொழிலுக்கான ஊதியத்தை பெற்றுக் கொடுத்தல், அங்கத்தவர் சேமிப்புக்கு வட்டி வழங்குதல், அங்கத்தவரின் தேவையினை மேற்கொள்ள குறைந்த வட்டியில் தவணை அடிப்படையில் கடன் வழங்குதல். அங்கத்தவரின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்குதல், அங்கத்தவரின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரையும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவரையும் அவ்வருடமே கௌரவித்து பரிசில்களையும், அவர்களுக்கான வங்கி சேமிப்பு புத்தகத்தினையும் வழங்கல், அங்கத்தவரின் இறப்பின்பின் அவரின் பின்உரித்திற்கு தகுதியுடையவரிடம் அவருக்கான மரணசகாய நிதி வழங்கல் போன்ற அங்கத்துவ சேவையையும், அங்கத்துவமற்ற சேவையாக சமூக பொது நலன் நிகழ்வுகள், கழகங்கள் என்பவற்றுக்கான பங்களிப்பு நிதி வழங்குதல், தொழில் பெறுமிடத்து சமூகத்தின் வறுமையான பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கல், அப்பிரதேசத்தின் பொது நிகழ்வுகளுக்கு பொருளாகவும், நிதியாகவும் பங்களிப்பு செய்தமை, கூட்டுறவு நிகழ்வுகளுக்கு கேட்கப்படும் நிதி பங்களிப்பை வழங்கியமை என்பதுடன் இறைபணியும் சமூகத்திற்கு அவசியம் என்பதற்கிணங்க வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த தேர், தீர்த்த உற்சவத்தின்போது தாகசாந்தி நிலையம் அமைத்து தாகசாந்தி பானம் வழங்கி அன்னதான பங்களிப்பு நிதியினையும் வழங்குதல் போன்ற சேவைகளை புரிந்து வரும் நிலையில்,

மேலும், பாரவூர்தி உரிமையாளரின் ஒற்றுமை, பலம், உழைப்பு மூலம் சங்கம் வலுப்பெற்று மேலும் மேலும் வளர்ச்சியடைய அங்கத்தவர், பணியாளர் 20வது ஆண்டு விழாவை வாழ்த்தி நன்றி சொல்ல கடமைப்பாடு உடையோம்.

வாழ்க வளர்க யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்.

யோ.ரதிகா,
பணியாளர்,
யா.மா.பா.உ.கூ.சங்கம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரங்கள் இணைந்தால்..............

பிள்ளையார் கோவில் மணியோசை காலை நேரம் ஆறு மணி என்பதனை உணர்த்தியது ஏன்டா தம்பி அப்பா இன்னும் கோயிலுக்கு போகேல்லையோ? அம்மாவின் குரல் அடுப்படியில் இருந்து கேட்க இல்லையம்மா அப்பா ஏதொ சங்கத்துக் கணக்கு பார்த்துக் கொண்டிருக்கிறார் மகளின் பதில் விரைவாக இருந்தது பிள்ளையாரை விட இப்ப சங்கம் பெரிசாப்போட்டுது. என்ற முனுமுனுப்பு லேசாக செல்வராசா வாத்தியாரின் காதில்விழ, கணக்குப்புத்தகத்தினை மூடி விட்டு பூக்கூடையைத் தூக்கிக் கொண்டு நான் கோயிலுக்கு போட்டு வாரன் என்றவாறு கோயிலை நோக்கி நடந்தார் வாத்தியார்.

செல்வராசா வாத்தியார் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் ஊரில் மதிப்பும், மரியாதைக்குமுரியவர் உண்மையான பற்றும், விசுவாசமும் உடைய சிறந்த கூட்டுறவாளர் அவரது கிராமத்தின் விநாயகர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளர் சங்கத்தால் வழங்கப்படும் கடனை தவணை தப்பாமல் அறவிடுவதில் சாதுரியம் மிக்கவர் சங்கத்தில் உள்ள அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் வாத்தியாரின் மாணவர்கள். அதனால் பொய்யான காரணங்களைக் கூறி கடன் பெறுவதும் குறைவு எடுக்கிற கடனை வச்சு ஏதாவது ஒரு வழியில் குடும்பத்துக்கு வருமானம் உழைக்கப்பார்க்க வேணும் அப்பத்தான் கடனை ஒழுங்காக கட்டலாம் என்ற வாத்தியாரின் வார்த்தைகள் கடனை வழங்கும் போது கட்டாயம் ஒலிக்கும்.

கோயிலுக்கு வந்த வாத்தியார் தனது வழிபாடுகளை நிறைவு செய்து கொண்டு பக்கத்துக்கடையில் பேப்பரையும் வாங்கிக் கொண்டு வீடு நோக்கி நடந்தவர் கடனுக்கு விண்ணப்பித்த வானதியின் வீட்டடியில் வரும் போது தான் நினைத்தார் கடன் உச்ச எல்லை கூட்டினது அனுமதி வந்ததை ஒருக்கா சொல்லிப் போட்டு போவம் எண்டு காசு கூடத்தேவைப்படுகுதெண்டவன் விரும்பின் எடுக்கட்டும் என்ற எண்ணத்துடன் படலையைத் தட்டினார்.

பிள்ளை நிக்கிறாளோ என்றவரிடம் வாங்கோ மாஸ்டர் அவ கடைக்கு போட்டா, இப்ப வந்திருவா, உள்ள வந்து இருங்கோ என்றான் வானதியின் கணவன் சேகர் ஏன் மாஸ்டர் அவவிண்ட கடன் ஏதும் கட்ட தவணை தப்பிட்டோ என்ற கேள்விக்கு இல்லையடாப்பா அவள் கடன் எல்லாம் கட்டி முடிச்சிட்டாள் திரும்ப கடனுக்கு விண்ணப்பிச்சவள் இப்ப கடன் ஐம்பதாயிரத்திலையிருந்து எழுபத்தஞ்சாயிரம்மாக்கி அனுமதி எடுத்திட்டம் அதான் அவளிட்ட சொல்லிட்டு போவம் எண்டு வந்தனான் அன்டைக்கும் கணக்கு கேட்டவள் காசு கூடத்தேவையா இருக்கு கடன் தொகை கூட்டியாச்சோ என்டவள் கூடத் தேவை எண்ட விண்ணபத்த மாற்றி தரவேணும் என்றார் வாத்தியார் ஓம் மாஸ்டர் என்றவாகனம் திருத்தி விட்டனான் காசு தேவை என்டனான் அதான் அவள் சொல்லி இருக்கிறாள் என்று சேகர் முடிக்க ஏன் தம்பி நீ வாகனம் வச்சு உழைக்கிறனி வாகனத்தால வருமானம் வரேக்க கிலோ மீற்றருக்கு இரண்டு ரூபாயோ இல்ல மூன்று ரூபாயோ ஒரு வங்கி கணக்கில போட்டுவச்சா ஏன் தம்பி வாகனம் திருத்த கடன் பட வேணும் வாகனம் உழைச்சதிலேயே அதை திருத்திப் போடலாம் என்ற வாத்தியாரிடம் ஏன் மாஸ்டர் நாங்கள் பயணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனம் வச்சிருக்கிற ஆக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் தொடங்கலாமோ என்ற தனது சந்தேகத்தை கேட்க தாராளமாக தொடங்கலாம் தம்பி ஆள சங்கம் எண்டு தொடங்காம கூட்டுறவுச் சங்கம் என்று தொடங்க வேணும் தம்பி அப்பத்தான் அரசின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் வலுவான அமைப்பாக இருக்கும் அதோட அதுக்கென அமைச்சு, திணைக்களத்தின் மேற்பார்வை, கணக்காய்வு என பல வழிகாட்டல்கள் இலகுவாக கிடைக்கும் கூட்டுறவு அமைப்பானது கூட்டத்தின் முன் தனி மனித அந்தஸ்தினை கொண்டிருப்பதனால் உங்களுக்கு ஏற்படும் சட்டப் பிரச்சினைகளுக்கு உங்கள் சார்பாக சங்கம் முன் நிக்க முடியும். உங்களுக்கான தொழில் வாய்ப்புக்களை நியாயமான முறையில் பங்கிட, புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க, உங்களின் பேரம் பேசும் ஆற்றலை அதிகரித்து கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பு கைகொடுக்கும். உனக்கு உதாரணமாக சொல்லுவதெண்டா லொறிகள், டிப்பர்கள் வைத்திருக்கிறவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்கென பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் என்ற ஒன்றை உருவாக்கிச்சினம் அந்தச் சங்கத்தின் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும், தொழில் வாய்ப்புக்களை நியாயமான முறையில் பங்கிடவும், அவர்களின் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் அவர்களுக்கு இளைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும் சங்கம் மூலம் ஒன்று சேர்ந்து போராடினம் அவை மட்டும் அப்படியொரு கூட்டுறவு அமைப்பை உருவாக்கியிராவிட்டால் பணபலம் படைத்தவரையும் அரசியல் செல்வாக்கு உள்ளவரையும் மட்டும் அதிகளவான தொழில் வாய்ப்பினை பெற்றிருப்பினம் மற்றவை பாதிப்படைந்திருப்பினம் அவை உருவாக்கின சங்கம் இன்றைக்கு அவைக்கு ஒரு பாதுகாப்பு அரணா இருக்கு பாத்தியா என்ற வாத்தியாரிடம் ஓம் மாஸ்டர் என சேகர் கூற, என்ன மாஸ்டர் என்னையோ தேடி வந்தனீங்கள் என்ற வானதியின் குரல் தொடர்ந்து படலையடியில் ஒலித்தது.

உம்மைத் தேடித்தான் மாஸ்டர் வந்தவர் சங்கத்தில் கடன் இப்ப ஐம்பதில் இருந்து எழுபத்தஞ்சாயிரமாக்கியாச்சாம் கூடத் தேவை எண்ட நீர் ஐம்பதுக்கு குடுத்த விண்ணப்பத்தை மாற்ற வேணுமாம். ஓம் மாஸ்ரர் இவர் வாகனம் திருத்தவும் காசு வேணுமாம் நான் வந்து மாத்தித் தாரன் மாஸ்டர் ஏன் கடையில் சனமோ என்ற மாஸ்டரிடம் இல்ல மாஸ்டர் கடைக்கு முன் வீட்ட இருக்கிற வனிதா என்னோட படிச்சவள் ஏதொ பினான்ஸ் கம்பனியிலா லோன் எடுத்தவளாம் அவளின் மானுசண்ட சம்பளத்தில ஒவ்வொரு நாளும் கழிக்கிறவங்களாம். மனுசன் இப்ப இரண்டு கிழமையா ஆஸ்பத்திரியிலயாம் கம்பனிக்காரன்கள் நேற்று வந்து வீட்டை வனிதாவ பேசிப் போட்டாங்களாம். அதான் அவள் இரவு தூக்கு மாட்டப் போனவளாம் பிள்ளையள் கத்திக் குளறி காப்பத்தினதுகள் எண்டு கடைக்காரர் சொன்னார் அதான் நான் போய் அவள பாத்துட்டு வாரன் என்ற வனிதாவிடம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதல்லாம் என்னத்தச் சொல்லுறது எல்லாம் எங்கட தலையில நாங்களே மண் அள்ளிப் போட்டது தானே, என்ற வாத்தியாரிடம் ஏன் அப்படிச் சொல்லுறிங்க மாஸ்டர் என்றான் சேகர். தம்பி உந்த பினான்ஸ் கம்பனிக் காரன்கள் ரத்தம் கூடிக்கிற லீச் அட்டை மாதிரி அது ரத்தத்தைக் குடிக்கேக்க தெரியாது அது ஊதிப் பெருசா வந்த பிறகு தான் தெரியும் எவ்வளவு ரத்தம் குடிச்சிருக்கு எண்டு அவங்கள் கம்பனிண்ட இலாபம், வேலை செய்கிற பெடியளின்ற சம்பளம், அவங்கட மோட்டர் சைக்கிள் பெற்றோல் எல்லாம் இவைக்குக் குடுக்கிற கடனுக்கு வட்டியா அறவிடுவாங்கள் தெரியுமோ உனக்கு வாத்தியாரின் குரலில் கோவம் சற்று எட்டிப் பார்த்தது. கடந்த காலங்களில் உந்தப் பினான்ஸ் கம்பனிகளில் எடுத்த கடனை கட்ட முடியாத பிரச்சினையில அநியாயமாக தங்கட உயிரை விட்டதுகள் அப்படி இருந்தும் எங்கட சனம் இன்னும் திருந்தேல என்டா என்ன செய்யுறது. கையில வெண்ணெய்யை வைச்சுக் கொண்டு நெய்க்கு அலையுற கூட்டம் தானே என்ற வாத்தியாரிடம் ஏன் மாஸ்டர் அப்படி செல்லுறிங்க என்றாள் வானதி

இங்க பார் பிள்ள எங்கட நாடு ஒரு கலப்புப் பொருளாதார நாடு. இங்கு முதலாளித்துவத்தோட போராட வேணுமென்டா நடுத்தர வருமானம், குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு கூட்டுறவு என்ற கவசத்துக்குள்ள இருந்தாத்தான் தப்புவினம் இல்லாட்டி முதலாளித்துவத்திட்ட மிதிபட்டுக் கொண்டு தான் இருப்பினம் இன்டைக்கு பார் பிள்ள எங்கட சங்கத்தில இருக்கிற இருநூறு அங்கத்தவர்களின் சேமக்காசும் இந்தக் கிராமத்துக்குள்ள சுழண்டு கொண்டு நிக்குது. நீங்க கட்டுற வட்டியும் நாளைக்கு திரும்ப உங்களுக்குத் தான் கிடைக்கும். ஆனா நீங்க பினான்ஸ் கம்பனிட்ட கடன் பெற்ற உங்கட கடன் தொகையும் அதற்கான அதிகளவான வட்டியும் கிராமத்தை விட்டுச் சென்று விடும். அவனும் கெட்டித்தனமாக நாளாந்த உழைப்பில் அறவிடுவதால் எங்கட சனமும் எவ்வளவு வட்டி அநியாயமாக போகிறது எண்டு பாக்கிறேல்ல கடந்த காலங்களில் சேமிப்பில் முதல் இடத்தில் இருந்த வட பகுதி மக்கள் இண்டைக்கு லீசிங்கிலையும் பினான்ஸ் கம்பனிகளிட்டயும் கடலில் மூழ்கிக் கொண்டு இருக்கினம் உந்த பினான்ஸ் கம்பனிகளினால எங்கட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும், தென்பகுதியில் இருந்து வந்து பால் கொள்வனவு செய்யும் நிறுவனங்களினால் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் வியாபாரத்தை எதிர் கொள்ள முடியாமல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் வலுவிழந்து வருகின்றன. இதுக்கு அந்த அடைப்புக்களையோ முதலாளித்துவ நிறுவனங்களையோ நாங்கள் குறை கூற முடியாது திறந்த பொருளாதாரத்தில் எல்லாமே போட்டிதான். அப்ப இதுக்கு என்ன தீர்வு மாஸ்டர் என்ற சேகரிடம்,

தம்பி எங்கட தலைவர் அடிக்கடி சொல்லுவார் வலியவன் வாழ்வான் என்று அதைப்போல கூட்டுறவு அமைப்புக்கள் வலிமையடைந்தால் நாங்கள் வாழ முடியும். இல்லையேல் முதலாளித்துவ அமைப்புக்களிடம் எதிர் காலத்தில் குறைந்த, நடுத்தர வர்க்க மக்கள் கடுமையாக போராட வேண்டி இருக்கும். கூட்டுறவு அமைப்புக்களை எதிர் காலத்தில் மீள வலிமையான அமைப்பாக கட்டியெழுப்ப பாடசாலைகள் தோறும் கூட்டுறவு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு மாணவர்களிடையே கூட்டுறவுக்கான விதைகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விதைக்கப்பட வேண்டும் அது எதிர் கால சந்ததிக்கு பலமான விருட்சமாக அமையும் என்ற வாத்தியார் பிள்ளை கதைக்க வெளிக்கிட்டா நேரம் போரது தெரியாது எல்லாற்ற வேலையும் தடைப்பட்டுப் போகும் நீ அந்தப் பிள்ளை வனிதாவுக்கு என்ன புத்தி மதிபுள்ள சொன்னனி

மாஸ்டர் நான் சொன்னனான் இன்டைக்கு உங்களுட்ட விண்ணப்பப் படிவம் வாங்கிக் கொண்டு வாறன் நீ எங்கட சங்கத்தில இனி என்டாலும் சேர் என்டனான் அவள் ஓம் என்டவள் என்ன நான் செய்யுறது சரிதானே மாஸ்டர் என்றவளிடம் நீ செய்தது நூறு வீதம் சரியானது பிள்ள அப்ப அவள் சங்கத்தில சேர ஓம் என்டுட்டாளோ இனி அவள் நினைச்சு பயப்படத் தேவை இல்லை என்றவர் அப்ப நான் போய்ட்டுவாறன் என்றவரிடம் ஓம் மாஸ்டர் நான் பிறகு வாறன் இரண்டுக்கும் விண்ணப்பம் எடுக்க எண்டார் வானதி. வாத்தியார் படலையைத் திறக்கும் போது நேரம் காலை எட்டுமணியைக் காட்டியது சங்கத்து வேலைய திரியிறது என்டா நேரகாலம் பாக்க மாட்டினம் அப்ப எந்த வருத்தமும் இல்ல என்ற வாத்தியாரின் மனைவியின் முனுமுனுப்பு மீண்டு வாத்தியாரின் காதில் ஒலிக்க தனது சங்கத்தால் ஊரில் ஒரு குடும்பம் இனி காப்பாற்றப்பட்டுவிடும் என்ற மகிழ்ச்சி வாத்தியாரின் முகத்தில் புண்ணகையாக வெளிப்பட்டது.

யாவும் கற்பனையே
கூட்டுறவாளன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவுக் கொள்கைகள்

இங்கிலாந்தில் ஆரம்பித்த கூட்டுறவு இயக்கமானது உலக இயக்கமாகமாறிவிட்டது. 1844ம் ஆண்டு ரொச்டேல் முன்னோடிகள் என அழைக்கப்படும் ரொச்டேல் நகரிலுள்ள தொழிலாளர்கள் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து படிப்படியாகப் பல வெற்றிகளைக் கண்டனர். அதனைத் தொடர்ந்தே வேறு நாடுகளிலும் வெவ்வேறு தேவைகளை நிறைவேற்றும் முகமாக கூட்டுறவுச்சங்கங்கள் தோன்றின. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியின் சின்னமாக 1985ம் ஆண்டு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனம் உருவாகியது. இந்த நிறுவனமே காலத்திற்குக் காலம் கூட்டுறவுக் கொள்கைகளை காலத்திற்கேற்ப வடிவமைத்து வெளியிட்டு வருகின்றது. எனினும் இதற்கு அடித்தளமாக ரொச்டேல் முன்னோடிகளால் அமைக்கப்பட்டு பின்பற்றப்பட்டுவந்த பின்வரும் எட்டுக்கொள்கைகளே காரணமாக இருந்தன. அவையாவன,

1) பொதுவான தடையற்ற அங்கத்துவம்.
2) ஜனநாயக முறையில் அமைந்த நிர்வாகமும், கட்டுப்பாடும்.
3) சந்தை விலைக்கே பண்டங்களையும், சேவைகளையும் விற்பனை செய்தல்.
4) உடன் பணத்துக்கே விற்பனை செய்தல்.
5) மூலதனத்திற்கு மட்டான வட்டி.
6) இலாபத்தில் அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப தள்ளுபடி வழங்குதல்.
7) அங்கத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.
8) அரசியல் சமய விடயங்களில் கோஷ்டி சேராது கண்டிப்பான நடுநிலமையை பின்பற்றல்

இவர்களால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை மையமாக வைத்தே இந்த எட்டுக் கொள்கைகளும் வகுக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வந்தது.

கூட்டுறவின் வளர்ச்சிப்போக்கில் உலக ரீதியாகக் கூட்டுறவு இயக்கங்களிடையே ஒரு பொதுத்தன்மையை பேணும் பொருட்டு பொதுவாக கூட்டுறவுக்கொள்கை ஒன்றின் அவசியம் உணரப்பட்டது. இதன் காரணமாக 1937ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனம் கூட்டுறவுக் கொள்கைகளை இரு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டது.

### 1) தேவையான (அடிப்படைக்) கொள்கைகள்

I. எல்லோருக்கும் தடையற்ற அங்கத்துவ அனுமதி.
II. குடியாட்சி முறையில் அமைந்த நிர்வாகம்.
III. மூலதனத்திற்கு மட்டான வட்டி.
IV. அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப இலாபத்தில் தள்ளுபடி வழங்கல்.

### 2) விருப்பத்தேர்வுக்குரிய கொள்கைகள்

I. கூட்டுறவுக் கல்விக்கு வசதியளித்தல்.
II. அரசியல் சமயச் சார்பின்மை.
III. உடன்பண விற்பனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு முன் வெளியிடப்பட்ட கொள்கைகளே இவை. இதன் பின்னர் உலகில் ஏற்பட்ட மாற்றங்களின் பொருட்டு 1966ம் ஆண்டு கொள்கைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தால் இரண்டாவது தடவையாக ஆறு கொள்கைகள் பிரகடனம் செய்யப்பட்டது.

1) தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை.
2) ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்.
3) மூலதனத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டிவீதம்.
4) இலாபம் (மேலதிகம்) அங்கத்தவர்களிடையே சமத்துவமாகப் பகிரப்படல்.
5) கூட்டுறவுக்கல்வி.
6) கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு.

1966ம் ஆண்டு பிரகடனப்படுத்திய மேற்படி ஆறு கொள்கைகளும் 1995ம் ஆண்டு முற்பகுதி வரை நடைமுறையில் இருந்தது. மீண்டும் மூன்றாவது தடவையாக அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனம் 1995ம் ஆண்டு ஏழு கொள்கைகளாக வகுத்து பிரகடனப்படுத்தியது. இவையே தற்போதும் நடைமுறையில் உள்ளது. அவை பின்வருமாறு,

1) தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை.
2) ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்.
3) அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு.
4) சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்படல்.
5) கல்வி, பயிற்சி, தகவல்.
6) கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு.
7) சமூக மேம்பாடு.

இவ்வாறு ரொச்டேல் முன்னோடிகளால் பின்பற்றப்பட்ட கூட்டுறவு நடைமுறைகளை தொடர்ந்து மூன்று தடவைகள் முறையே 1937, 1966, 1995ம் ஆண்டுகளில் உலக மாற்றங்களுக்கும் கூட்டுறவு இயக்கத்தின் தேவைக்கும் ஏற்ற வகையில் அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனம் கொள்கைகளை பிரகடனம் செய்து வந்துள்ளது. பிரகடனம் செய்யும்போது ஒவ்வொரு கொள்கைகள் தொடர்பாகவும் நீண்ட விளக்கம் அளிக்கப்பட்டே பிரகடனப்படுத்தப்படும். அவை உள்ளடக்கப்படின் கட்டுரை மிகவும் நீட்சி பெறும். எனினும் 1995ம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட ஏழு கொள்கைகள் தொடர்பான சுருக்கமான விளக்கத்தை இங்கு குறிப்பிடுகின்றேன்.

**1) தன் விருப்பார்ந்த தடையற்ற அங்கத்துவம்**

ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருபவர் தன் சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே சேரவேண்டும். உறுப்பினராக ஒருவருக்குள்ள சுதந்திரத் தன்மைகள் யாவும் கூட்டுறவுச்சங்கத்திற்கும் இருத்தல் வேண்டும். அதாவது புற சக்திகளின் தலையீடு இன்றி ஒரு சங்கம் தன் விருப்பப்படியே உறுப்பினராக அனுமதிப்பது பற்றி தீர்மானித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உறுப்பினருக்கு சங்கத்தில் அக்கறை குன்றும் போது தாமாகவே சங்கத்திலிருந்து விலகுவதற்கு உரிமை வேண்டும். அதே போன்று சங்கத்தின் நோக்கத்தை அடைவதற்கு ஒரு உறுப்பினர் இடையூறாக இருப்பின் அவரது உறுப்புரிமையை முடிவுறச் செய்வதற்கு சங்கத்திற்கு உரிமை இருத்தல் வேண்டும். ஒருவர் தன் விருப்பப்படியே அங்கத்தவராக சேரமுடியும் என்று குறிப்பிடும் இக்கொள்கை, இச்சுதந்திரம் வரம்பற்றதொன்றல்ல என்பதையும், இன்றியமையாத காரணங்களின் பொருட்டு இச்சுதந்திரம் ஓரளவு மட்டுப்படுத்த முடியும் என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது. இவை நடைமுறைச் சாத்தியங்களின் ஆய்வுகளின் பிரகாரம் விளக்கப்படுகிறது.

### 2) ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும், நிர்வாகமும்

கூட்டுறவுச் சங்கங்கள் குடியாற்சி முறையில் அமைந்தவை. சங்கத்தின் தீர்மானங்களை எடுக்கும் உயரதிகாரம் எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் உரிமையுள்ள பொதுச்சபைக்கே உண்டு. ஆரம்ப சங்க உறுப்பினர்கள் எல்லோரும் சமஉரிமை உடையவர்கள். ஒவ்வொரு உறுப்பினர்க்கும் ஒரு வாக்குரிமையே உண்டு.

உயர்மட்ட சங்க உறுப்பினர்களும் இந்த உரிமையை அனுபவிக்கும் அதே நேரத்தில் வாக்குரிமை விடயத்தில் ஜனநாயகத் தன்மைக்குப் பொருத்தமான வேறு முறைகளும் கையாளப்படலாம். போன்ற விடயங்களை இக்கொள்கை விரிவாக வரையறை செய்துள்ளது.

### 3) அங்கத்தவர்களின் பொருளாதார பங்களிப்பு

அங்கத்தவர்கள் தாங்கள் வழங்கும் மூலதனத்திற்கு ஏற்ப மட்டான பிரதிபலனை அடையவேண்டும். இது ஜனநாயகமுடையதும், சமமானதாகவும் இருக்க வேண்டும். வாக்களிக்கும் உரிமை பங்கு மூலதன அடிப்படையில் அன்றி உறுப்புரிமை அடிப்படையில் அமையும். மூலதனத்திற்கு மட்டான வட்டி என்பதுடன் இலாப மேலதிகமானது குறித்த சங்கத்தின் தொழிற்பாடுகளை மேம்படுத்தவும், அங்கத்தவர்களின் வியாபாரப் பங்களிப்புகளுக்கேற்ப அவர்களின் நல உரிமைகளைப் பேணவும் அங்கத்தவர்களின் அனுமதியுடன் ஏனைய தேவைகளுக்கு அதனைப் பயன்படுத்த முடியும் என்பதை மேலும் வலியுறுத்துகின்றது.

### 4) சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்படல்

உலகின் பெரும்பாலான நாடுகளில் கூட்டுறவு அமைப்புகள் அந்தந்த நாட்டின் அரசுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. கூட்டுறவு அமைப்புக்களுக்கான சட்டங்களை ஆக்குதல், வரிக்கொள்கைகள் போன்றன சில சந்தர்ப்பங்களில் கூட்டுறவுக்கு சாதகமாகவும் அன்றி பாதகமாகவும் அமையலாம். ஆனால் கூட்டுறவு அமைப்புக்கள் தமது சுதந்திரமான இயக்கத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையே இக்கொள்கை வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5) கல்வி, பயிற்சி, தகவல்

கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்கள், இயக்குனர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான கல்வியை மட்டுமல்ல இவ் அமைப்புக்களை முறையாக இயக்குவதற்கான பயிற்சி வழங்குதலையும் உறுதிப்படுத்த வேண்டும். இன்று உலகம், தகவல் யுகம் என விரிவடைந்து வருகின்றது. அதற்கேற்ப கூட்டுறவுத் தகவல்கள் பெறப்பட்டு பரிமாற வேண்டும் என்பதை இக்கொள்கை வலியுறுத்துகின்றது.

### 6) கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு

கூட்டுறவு நிறுவனங்கள் தமது உறுப்பினர்களினதும், சமூகங்களினதும் நலவுரிமைகளை மிகச்சிறந்த முறையில் பேணும் பொருட்டுச் சகல கூட்டுறவு நிறுவனங்களும் உள்ளூர், தேசிய, அனைத்துலக அடிப்படையில் நடைமுறைக்குகந்த எல்லா வழிகளிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைத்தல் அவசியம். கூட்டுறவாளர்களின் உலகளாவிய செயல் ஒற்றுமையை நடைமுறைச் சாதனையாக்குவது இவர்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அதாவது நடைமுறைக்குகந்த எல்லா வழிகளிலும் கூட்டுறவு நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தல் வேண்டும். விளைவாக கூட்டுறவாளர்களின் உலகளாவிய செயல் ஒற்றுமையை நடைமுறை சாதனையாக்குதல் வேண்டும் என்பது பற்றி இக்கொள்கையில் பேசப்படுகிறது.

### 7) சமூக மேம்பாடு

கூட்டுறவின் பிரதான நோக்கம் தனது அங்கத்தவர்களின் பொருளாதார சமூக மேம்பாட்டிற்கு உழைப்பதாகும். அத்துடன் அது சமூகத்திற்குக் குறிப்பாகச் சங்கம் இயங்கும் பரப்பின் சமூக நலன்களுக்கு உதவ வேண்டும். அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி அங்கத்தவர்கள் அல்லாதோரின் சமூக கலாச்சார பொருளாதார விருத்திக்கும் தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது வேலைத்திட்டங்களுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதை இக்கொள்கை வலியுறுத்துகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு கொள்கைகள் தொடர்பாகவும் விரிவான விளக்கங்கள் பிரகடனத்தின் போது வெளியிடப்படுகின்றது. இக் கொள்கைகளில் எது முக்கியத்துவம் பெற்றதென வகைப்படுத்த முடியாது. ஏழு கொள்கைகளும் சமமான முக்கியத்துவம் பெற்றவை. இந்த ஏழு கொள்கைகளையும் முழுமையாகக் கடைப்பிடிக்கும் நிறுவனமே உண்மையான கூட்டுறவு நிறுவனமாகக் கொள்ளமுடியும். கூட்டுறவாளர்கள் விரிவாக இக் கொள்கைகளைக் கற்று அதன்வழி செயல்படும்போது வெற்றிகரமான கூட்டுறவுச் சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

திருமதி வே.செல்வரத்தினம் (MA).
செயலாளர்,
யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவு

மக்கள் தமது பொருளாதார கலை, கலாச்சார, சமூக அபிவிருத்தி கருதி சம உரிமையும் கடமையும் என்ற அடிப்படையில் தாமாகவே முன்வந்து ஒன்று சேர்தல் கூட்டுறவு (Co-Operation) எனப் பொதுவாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழிற் புரட்சியினைத் தொடர்ந்து இங்கிலாந்து தேசத்தில் 19ம் நூற்றாண்டின் "நடுப்பகுதியில்" கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றது. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கைத்தொழில் புரட்சியினால் உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கைத்தொழில் புரட்சியினால் மக்களுக்கு சாதகமான விளைவுகளும் அதே வேளையில் பாதகமான விளைவுகளும் ஏற்பட்டன. கூட்டுறவின் தோற்றத்திற்கு இந்த கைத்தொழில் புரட்சியின்போது ஏற்பட்ட சமூக பொருளாதார விளைவுகள் காரணமாக அமைந்தன. பொருளாதார முறைமைகள் மாற்றம் அடைந்தன. முதலாளித்துவ பொருளாதாரம் தோற்றம் பெற்றது. முதலாளித்துவ சுரண்டல்களினால் பாதிப்படைந்த தொழிலாளர் வர்க்கத்தின் ஓர் இயக்கமாகவே இக்கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றது. 1844ம் ஆண்டில் இங்கிலாந்தின் றொச்டேல் நகரில் முதன் முதலில் 28 ஆலைத்தொழிலாளர்கள் நிறுவிய நுகர்வுக் கூட்டுறவுச் சங்கமே உலகில் முதலாவதாக வெற்றிகரமாக நிறுவப்பட்ட கூட்டுறவுச்சங்கம் ஆகும்.

இவ்வாறாக உலகநாடுகள் எங்கிலும் கூட்டுறவு அமைப்புக்கள் படிப்படியாக உருவாக்கம் பெற்று அந்தந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கும் தேசிய அபிவிருத்திக்கும் தமது பங்களிப்பை வழங்கி வந்தன.

இலங்கையைப் பொறுத்த வரையில் 1906ம் ஆண்டில் கூட்டுறவு அமைப்பு முறை உருவாக்கம் பெற்று தற்போது ஒரு நூற்றாண்டைக் கடந்து இரண்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெற்றிகரமாகக் கால் பதித்துள்ளது. ஐக்கிய நாணய சங்கங்களாக தோற்றம் பெற்று பின்னர் பண்டகசாலைச் சங்கங்களாகவும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களாகவும் கூட்டுறவு நிறுவனங்கள் வியாபித்து காணப்படுகின்றன. தொடர்ந்து மக்கள் தமது குழுவினரின் தேவைகளை நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் பல வகைகளில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களே இக்கூட்டுறவு நிறுவனங்களாகும். இங்கு மக்கள் கூட்டுறவு அமைப்புக்களில் இணைக்கப்படும் போது அவர்கள் அதன் அங்கத்தவர்கள் ஆகின்றாரகள். இவை இவ் அங்கத்தவர்களினால் ஜனநாயக முறையில் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவன அமைப்புக்களே கூட்டுறவு அமைப்புக்களாகும்.

**கூட்டுறவின் அடிப்படைப் பண்புகளாக,**

- ❖ சுய உதவி
- ❖ பரஸ்பர உதவி
- ❖ சிக்கனம் என்பன விளங்குகின்றன.

இங்கு சுய உதவி எனும் போது ஒருவர் தனது திறமையையும், வழங்களையும் உதவியாகக் கொண்டு பிறருக்கு உதவி செய்தல் மூலம் தனக்கும் உதவி செய்யலாம் என்ற கருத்தினை குறிக்கின்றது. பரஸ்பர உதவி என்பது ஒருவர் செய்த உதவிக்கு கைமாறாக அவருக்கு தேவையான உதவிகளை செய்வதனைக் குறிக்கின்றது. சுய உதவியும், பரஸ்பர உதவியும் கூட்டுறவின் சிறந்த பண்புகளாகும். சிக்கனம் என்பது ஒருவர் தனது வருமானத்திற்கேற்ப திட்டமிட்டு தேவையற்ற செலவுகளை நீக்கி முக்கிய செலவுகளை மட்டும் செலவு செய்வதனைக் குறிக்கும். சிக்கனத்தின் மறுமுனை சேமிப்பு ஆகும். சிக்கனமாக வாழ்ந்தால் ஒருவர் தனது சேமிப்பையும் முதலீட்டையும் பன்மடங்காக அதிகரிக்கலாம்.

இலங்கையில் முதன் முதலில் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் என அழைக்கப்படும் ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாகின. அதனைத் தொடர்ந்து பல்வேறு நோக்கங்களுக்கும் கூட்டுறவு அமைப்புக்கள் உருவாக்கப்படுவதற்கான சட்டரீதியான அங்கீகாரம் கிடைக்கப்பெற்று உருவாக்கம் பெற்றன. பல நோக்கமுடைய அமைப்புக்கள் பல்வேறு வகையான முயற்சிகளிலும் கூட்டுறவுத்துறை தமது பங்கினை ஆற்றி வருவதனை நாம் காணக்கூடியதாக உள்ளது. விவசாய உற்பத்தித்துறை, கைத்தொழில் உற்பத்தித்துறை, நுகர்ச்சித்துறை, சந்தைப்படுத்தல்துறை, கடன்வழங்கல்துறை, பல்வேறு வகையான சேவைகள் வங்கிச்சேவை, போக்குவரத்துச்சேவை, கல்விச்சேவை, மருத்துவசேவை என்பவற்றின் மூலம் கூட்டுறவு அமைப்புக்கள் தமது அங்கத்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் சிறந்த பயன்பாடுடைய அமைப்பாக செயலாற்றி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய செயற்பாடுகளையும் சேவைகளையும் வழங்குகின்ற கூட்டுறவு அமைப்புகளாக பின்வரும் அமைப்பு ரீதியான கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன.

1) ஐக்கிய நாணய சங்கங்கள் (சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்கள்)

2) உற்பத்தி விற்பனை கூட்டுறவுச்சங்கங்கள்.

3) பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள்.

4) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள்.

5) விவசாய சந்தைப்படுத்தல் கூட்டுறவுச்சங்கம்.

6) கைத்தொழில் கூட்டுறவுச்சங்கம்.

7) கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்.

8) கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்.

9) புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்.

10) போக்குவரத்துச்சேவை கூட்டுறவுச்சங்கம்.

11) வைத்தியசாலை கூட்டுறவுச்சங்கம்.

12) பாடசாலைக் கூட்டுறவுச்சங்கம்.

திரு. த. ரமேஸ்குமார்,
பகுதி நேரவிரிவுரையாளர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.
கல்வி பயிற்சியளிப்பு உத்தியோகத்தர்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 வது ஆண்டு விழாவிற்கான போட்டிகளில்
பங்கு பற்றிய மாணவர்கள்



அங்கத்தவர் பிள்ளைகளின் கற்றல்
உபகரணம் வழங்கிய போது



தரம் 5 ஆண்டு புலமை பரீட்சையில் சித்தி எய்திய, பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் கௌரவிப்பின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு (அங்கத்தவர் பிள்ளைகளுக்கிடையில்) நடாத்தப்பட்ட கட்டுரை போட்டியின் சில கட்டுரைகள்

# யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத் துறையின் போக்கு

“கூட்டுறவே நாட்டுயர்வு” என்ற உயர்ந்த தத்துவத்திற்கிணங்க கைத்தொழில் புரட்சியின் பின்னரான கால கட்டங்களில் இன, மத, பேதமின்றி மக்களுக்காக தோன்றிய இயக்கமே கூட்டுறவு ஆகும். அந்த வகையில் ஆரம்ப காலகட்டத்தில் ஐரோப்பாவில் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் கூட்டுறவு இயக்கம் எனும் மக்கள் சக்தி மலர்ந்தது. பல நாடுகளில் ஊடுருவ ஆரம்பித்த இம்மக்கள் சக்தியானது இலங்கையிலும் முளை கொண்டு வளரத் தொடங்கியது. அதன் காரணமாய் இலங்கையிலே 1911ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அது மூலை முடுக்கெங்கும் செழித்து வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

பணம் படைத்தவர்கள் பெருவிலை கொடுத்து பொருள் கொள்ள ஏழைகள் பொருள் பெற முடியாதவர்களாய் தவித்தனர். இந்நிலையில் சமுதாயத்தில் வறுமையை ஒழித்து நலிவுற்ற மக்களின் நலன்களை கருத்திற் கொண்டு யாழ் மண்ணிலே சேவையாற்ற கூட்டுறவுத்துறை தலைப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமங்களெங்கணமும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு தரமான பொருளை சரியான முறையில் வழங்குவதோடு சிக்கனம், சுயஉதவி, கூட்டுறவு ஆகியவற்றை வளர்ப்பதனையும் நோக்கமாக கொண்டிருந்தது. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட பண்டகசாலைகள் பிரதேச ரீதியிலும் தம் கருத்தை ஒருமித்து தெரிவிக்க ஏதுவாக சமாசங்களை அமைத்தனர். இதே காலகட்டத்தில் யாழ் மண்ணிலே கைத்தொழில் கூட்டுறவாளர் சங்கம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், மீன்பிடிக் கூட்டுறவாளர் சங்கம் போன்ற பல கூட்டுறவு அமைப்புக்கள் வளர்ச்சி கண்டன.

இதே காலகட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கருவுற்றது. வறிய மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை வழங்குதலோடு மட்டுமன்றி கடனுதவிகளை வழங்குதல், உற்பத்திகளை சந்தைப்படுத்தல், நுகர்வுப் பொருட்களை விநியோகித்தல் போன்ற உன்னதமான சேவையினை ஆற்றி வந்தது. இதன் விளைவாக யாழ் மண்ணின் மைந்தர்கள் கூட்டுறவுத் துறையின் சக்தியை உணரத் தலைப்பட்டனர். இதன் காரணமாய் தங்கள் வாழ்வை கூட்டுறவோடு கைகோர்த்து நடைபயில ஆரம்பித்தனர். இதனால் யாழ்ப்பாணத்திலே கூட்டுறவுத் துறையானது மக்களின் சமுதாய மன ஒருமைப்பாட்டிலே முளைவிட்டு சனநாயகம் என்னும் நீருண்டு செழித்து வளர்ந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலே கூட்டுறவுத் துறையானது விவசாயம், பாற்பண்ணை உற்பத்தி, மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் பாரிய கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாய் அமைந்தது என்றால் மிகையில்லை.

அந்த வகையில் கூட்டுறவுத் துறையானது விவசாயத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை ஆராய்கின்றபோது விவசாயிகளுக்கு தேவையான விவசாய உள்ளீடுகளை வழங்குவதில் கவனம் செலுத்தி வந்தது. விவசாயிகளுக்கு இயற்கை பசளையுடன், உரங்களையும் பாவிக்கும்படி கூறிய பெருமையும் கூட்டுறவு இயக்கத்திற்கே உண்டு. வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் புல் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள் என்பவற்றை கூட்டுறவுச் சமாசங்களினூடாக விவசாயிகளுக்கு விற்பனை செய்தது. இவ்விதம் யாழ் மண்ணிலே உரப்பாவனை, நல்லின விதைகள், விவசாய இரசாயனம் போன்றவற்றினை அறிமுகப்படுத்திய பெருமையும் கூட்டுறவு இயக்கத்திற்கே உண்டு. மரபு ரீதியாக பேணப்பட்டு வந்த பாரம்பரிய வழிமுறையை கைவிட்டு உழவு இயந்திரங்களை பாவிக்கும்படி கூறி மக்களின் விவசாயத் தேவைதனை கூட்டுறவு இயக்கம் பூரணப்படுத்தியது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

நல்ல அறுவடையைப் பெற்ற மக்கள் அதற்கேற்ற விலை கொடுப்பதில்லை. இதனைப் போக்க முன்வந்த கூட்டுறவு அமைப்புக்கள் 1933ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே புகையிலையை சந்தைப்படுத்த யாழ்ப்பாணம் புகையிலை கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தது. மேலும் உப உணவுப் பொருட்களான வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் விலைக்கு வாங்கியது. இதனால் விளை பொருளாளர்கள் நன்மை அடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம் போன்ற இடங்களில் பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றை ஒன்று சேர்த்து யாழ் தீபகற்ப கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் பெறப்படுகின்ற பால் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. பாலை விற்று மக்கள் நன்மை அடைந்தனர். பாற்பண்ணைக்காரர்களுக்கு நல்ல இன பசுக்களை பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கம் பெற்றுக் கொடுத்தது. மிருக வைத்தியரின் சேவையையும் பெற்றுக் கொடுத்தது. இதன் ஊடாக பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கம் வளர்ச்சி அடைந்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டை பூர்த்தி செய்ய மீன்பிடிக் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. வடமாகாணத்திலே ஐம்பது வீதத்திற்கும் மேலதிகமாக மீன்பிடித் தொழிலுக்கான வளங்கள் காணப்படுகின்ற காரணத்தால் மீன்பிடித் தொழில் புரிவதற்கு மீன்பிடிக் கூட்டுறவாளர் இயக்கம் அளப்பரிய சேவை புரிந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு நாடு முன்னேற கைத்தொழில் சிறக்க வேண்டுமென உணர்ந்து கொண்ட வடமாகாண கூட்டுறவுத்துறை குடிசைக் கைத்தொழில் சிறு கைத்தொழிலை யாழ் மாவட்டத்தில் ஆரம்பித்தது. ஓலை, நார் என்பவற்றைக் கொண்டு பாய், கடகம், பெட்டி போன்ற முதலீட்டுப் பொருட்களை முனைந்தனர். இவ்வாறு கைத்தொழில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் எழுவைதீவில் நார்க் கைத்தொழிலையும், நெடுந்தீவு 3ம் வட்டாரத்தில் பாய்க் கைத்தொழிலையும் மேற்கொண்டு வெற்றி கண்டது.

இன்று கூட்டுறவுப் பெருமகனாரின் பெயரில் வாழும் வடக்கில் கூட்டுறவுத்துறை தனியார் முதலீட்டோடு போட்டி போட முடியாமல் பின்தங்கி விட்டது. இந்நிலை மாற்றப்பட்டு கூட்டுறவு இயக்கம் புத்துயிர் பெற்று திறம்பட ஜொலித்தால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத்துறையின் போக்கு உச்சத்தை தொடும் என்பது திண்ணம்.

கோபிகா தவராசா
க. பொ. த. உயர்தரம்
யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு (அங்கத்தவர் பிள்ளைகளுக்கிடையில்) நடாத்தப்பட்ட கட்டுரை போட்டியின் சில கட்டுரைகள்

# கூட்டுறவு என்பது மக்கள் இயக்கமாகும்

மனிதன் தனது அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப உலகிலுள்ள எல்லாவற்றிற்கும் புத்துயிர் கொடுத்து சிறப்பமைய செய்து வாழ்த்துகின்றான். இது மனித குல வரலாறு கூறும் உண்மை. கூட்டுறவு இந்த உண்மைக்கு மாறுபட்டதன்று.

கி.பி.18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக மக்களில் வாழ்வில் பெரியதொரு இருளை ஏற்படுத்தியது. இது பெரிதும் ஏழை மக்கள் வாழ்வில் ஏற்பட்டது. முதலாளியர்களின் கொடுமைகள் துன்பங்கள் எல்லாவற்றையும் ஏழைமக்கள் அனுபவித்தனர். இதனை மனதில் ஏற்படுத்தி தீவிர அக்கறையுடன் றொச்சேடேல் முன்னோடிகள் கூட்டுறவு அமைப்பை உருவாக்கினர். இது காலப்போக்கில் மக்களிற்கு ஒரு சிறந்த வழிவகுப்பாக அமைந்தமையால் மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு தொடர்ந்து வாய்க்காலில் ஓடுகின்ற சிறிய மீனின் முட்டையைவிட சிறிய ஆலம்விதையாக முளைத்து இந்த கூட்டுறவானது பல கொள்கைகளையும் பிரகடனங்களையும் மாற்றியமைத்தபோதும் இது ஒரு மக்கள் இயக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. உலகிலுள்ள எல்லா நிறுவனங்களிலும் பார்க்க 170 வருடங்கள் பழமையான மக்கள் இயக்கமாக காணப்படுகின்றது.

கூட்டுறவுக்குரிய வரைவிலக்கணங்களை நோக்கின் மக்களது பொருளாதார தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு தாமாகவே ஒன்றாக இணைந்து ஆக்கப்பட்ட சக்தியின் ஒருபகுதி தான் கூட்டுறவு என அறிஞர் மேத்தா கூறுகின்றார். "கூட்டுறவு என்பது மக்கள் அமைப்பாகும்" ஆனாலும் மக்கள் இதயத்திலிருந்து எழும் ஒரு உணர்வுக்களம் கூட்டுறவு என சேர்பாவின் கூறுகின்றார்.

கூட்டுறவு என்பது மக்கள் அமைப்பாகும். தமக்கென உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு ஆகும். இதனை தலைவர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. தலைவர் என்பவர் சர்வஜன முறைப்படி அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படும். நிர்வாக சபை பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டது. சிறப்பான முறையில் நிர்வாகம் நடாத்தப்படும். இதனை அவதானிப்பதற்கு பொதுச்சபை திணைக்களத்தால் நியமனப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மாவட்டத்தை ஆராயுமிடத்து மக்கள் இயக்கமாக தொழிலாளர் சங்கம், கடற்தொழிலாளர் சங்கம், சிக்கன கடன் வழங்கும் சங்கம், புடவைத் தொழிலாளர் சங்கம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், யாழ் மாவட்ட பாரவூர்திகள் சங்கம் போன்ற சங்கங்கள் சிறப்பாக நடைபெறுவதனை அவதானிக்கலாம்.

ஆனால் மாவட்ட திணைக்களத்தில் 1000ற்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இவற்றுள் 300ற்கு மேற்பட்ட சங்கங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இவற்றுள் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களும் ஆயிரக்கணக்கான பணியாளர்களும் பணிபுரிகின்றனர். இவ்வாறு கூட்டுறவு ஒரு மக்கள் இயக்கமாக இருப்பதில் தொழில் வாய்ப்பு உதவிகளை வழங்கிவருகின்றது.

ஆனால் மக்கள் மத்தியில் கூட்டுறவு பெரும் வளர்ச்சியை கண்டு வந்தது. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் சாதி, மத, அரசியல் வேறுபாடுகளுடன் தலையீடுகளும் காணப்படுகின்றன. இதனால் ஓடிந்துபோன மரம் போல காணப்படுகின்றது. மக்கள் மத்தியில் ஒரு அக்கறையின்மை கூட்டுறவு பற்றிய கல்வி இன்மை போன்றவற்றால் கூட்டுறவு தமது வளர்ச்சியில் பின்தங்கி காணப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் இருந்து கூட்டுறவை கட்டியெழுப்ப வேண்டும். ஏனென்றால் கூட்டுறவு தான் நாட்டுறவு என நாட்டை வளர்ப்போம்.


செல்வன் ஜெ.ஜெயவினோதனன்
தரம் - 10
புனித பரியோவான் கல்லூரி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| வருடம் | இலாபம் |
|---|---|
| 1997 | 35,602.50 |
| 1998 | 89,420.66 |
| 1999 | 163,916.44 |
| 2000 | 74,943.31 |
| 2001 | 160,689.83 |
| 2002 | 77,319.69 |
| 2003 | 261,782.51 |
| 2004 | 665,757.73 |
| 2005 | 734,641.31 |
| 2006 | -551,555.49 |
| 2007 | 968,472.80 |
| 2008 | 2,042,586.14 |
| 2009 | 2,060,080.30 |
| 2010 | 1,061,009.58 |
| 2011 | 1,881,312.47 |
| 2012 | 371,096.51 |
| 2013 | 470,286.91 |
| 2014 | 604,679.28 |
| 2015 | -422,908.96 |

சங்கத்தின் இலாப நட்டம்




யோ. ரதிகா
கணக்குப்பதிவாளர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சங்க பாரவூர்திக்கு உடற் கோப்பு மேற்கொண்ட போது



சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் தாக சாந்தி நிலையம்




சங்க பாரவூர்திக்கு உடற் கோப்பு மேற்கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் உள்ள பாரஊர்திகளின் அலங்காரக் கலை வேலைப்பாடுகள்.

யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டில் உள்ள பாரஊர்திகள் வெறுமனே போக்குவரத்தினை, பொருளாதாரத் தேவையினை ஈடுசெய்வதாக மட்டும் இல்லாமல் அது அவர்கள் வாழ்க்கையுடன் நெருக்கமாக காணப்படுகிறது. கார்கள், முச்சக்கரவண்டிகள், பேருந்துகள் என்பவை தகரங்களினால் மூடி அடைக்கப்பட்டு உலக நாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பப்பட்டு சந்தையில் விற்கப்படுகிறது. முச்சக்கரவண்டிகள், கார்கள், பேருந்துகள் போல தகரங்களினால் மூடி அடைக்கப்பட்டுப் பாரஊர்திகள் இறக்குமதி செய்யபப்படுவதில்லை. மாறாகப் பாரஊர்திகளின் அடிச்சட்டகம் தனியான ஒரு பகுதியாக England, Japan, India போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டு அடிச்சட்டகம் தனியான ஒரு பகுதியாக சந்தையில் விற்கப்படுகிறது. இவ்வாறு விற்கப்படும் அடிச்சட்டங்களுக்கு உள்ளூர்களில் வீடு அல்லது கப்பல்கள் கட்டுவது போல தகரம், மரத்தினை கலந்து முன் முகப்பகுதி, உடற்பகுதிகளை பாரஊர்தியின் அடிச்சட்டகத்தில் இருந்து திட்டமிட்டு உரிய அளவுகளில் செய்கின்றனர். இதனால் ஏனைய ஊர்திகளைப்பார்க்கிலும் காண்பிய அடிப்படையிலும், பாரஊர்திகளின் திட்டமிட்ட உருவாக்கத்திலும் வித்தியாசமானதாகவும், தனிப்பண்பு உடையதாகவும் இருக்கின்றது.

பாரஊர்தியினைப் பொதுவாக நாம் 'லொறி' எனவே பேச்சு வழக்கில் அழைக்கின்றோம். “லொறி தமிழில் 'பாரஉந்து', 'சரக்குந்து' எனப்படுகிறது. 'பாரம் எனின் கனமான பொருள் அல்லது பளு' என்றும் 'ஊர்தி எனின் ஏறிச்செலுத்தப்படும் வாகனம்' என்றும் அர்த்தப்படும். கனமான பொருளிளை ஏற்றிச் செல்லும் வாகனம் என அர்த்தப்படுகிறது. இதனை விட லொறிவண்டி எனவும் அழைக்கின்றனர். இவ்வகையே பாரஊர்தி என்பதற்குப் பல்வேறு விளக்கங்களினை அறியமுடிகின்றது. அவையாவன:

- பாரமேற்றும் திறந்த மோட்டார் வண்டி
- பார உந்து, பாரமோட்டார்வண்டி, இரும்புப்பாதைக்கட்டை வண்டி
- தட்டையான நான்கு சக்கரக்கட்டை வண்டி வகை லொறி ஆகும்.

“இது ஒரு பெரிய இயந்திரம் பாரிய சுமைகளை சுமந்து செல்வதற்காக உருவாக்கப்பட்டது. இது “ட்ரக்” எனவும் அழைக்கப்படும். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 'Laurie' என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். வடக்கு ஆங்கிலத்தின்படி 'larry' எனின் 'இழுப்பது' என்ற கருத்து கொண்டுள்ளது. இதையே பின்னர் “lorry” என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்கின்றார்கள். ஏனெனில் இது பாரிய பொருட்களைக்கொண்டு செல்ல அல்லது சுமந்து செல்வதற்கு உதவுகின்றது. இந்த 'lorry' எனும் சொல் 1570 களில் தோன்றி இருக்கலாம் என்கின்றனர். இதனை French இல் 'lourd' எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேயில் 'lura' எனவும் அழைத்திருக்கின்றார்கள். 'Lorry' எனும் சொல் வடஜேர்மனிய மொழியில் இருந்தும் தோற்றம் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. லத்தீனில் "lurt" எனும் சொல்லினால் தோன்றி இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

பாரஊர்தி அலங்காரம் என்பது வர்ணம்பூசுதல், வரைதல்கள், தச்சுவேலை, தனிப்பண்புடைய எழுத்துக்கள், ஒட்டுச் சித்திர (Sticker) அலங்காரக் காட்டுருக்கள், உலோகவேலைகள் என்பவற்றின் கூட்டுச் சேர்க்கையாகும். இது கற்பனை உருக்கள், இயற்கையான நிலத்தோற்றக் காட்சிகள், மற்றும் மிருகங்கள், பறவைகளுடைய உருவங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதினை உள்ளடக்கியுள்ளது. பாரஊர்தி அலங்காரம் முழுமையாகப் பாரஊர்திகளினுடைய பரப்புக்களின் மீது அலங்கரிக்கப்படுகிறது.

"யாழ்ப்பாணப் பிரதேசங்களில், ஆரம்பகாலப் பாரஊர்தி வகைகளாக,

- Dotch
- சவலற்
- வெற்போர்ட் (தட்டிவான்)
- கம்பியினால் பெட்டியாக மூடி அமைக்கப்பட்ட பாரஊர்தி (கம்பி Rolly)
- ISUS
- LANKA ASHOK LEYLAND

போன்ற வகைகள் காணப்பட்டதாக ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

## யாழ்ப்பாணப் பாரஊர்திகள் என்ற அடையாளம்.


"இலங்கையில் 1950 களில் பேருந்துகளிற்கு உடற்கட்டமைப்பு வேலைப்பாடுகள் 'கர்ஸன்" நிறுவனத்தின் கீழ் இடம் பெற்றதாக ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர். 1960-1965 களில் பந்தற கொற குருநாகல், நித்தம்புவ, வென்னப்புவ, கண்டி குண்டக சாலை பிரதேசங்களில் உடற்கட்டமைப்பு வேலைப்பாடுகள் இடம் பெற்றதாக ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பகாலப் பாரஊர்திகளில் பின்பகுதி அமைப்பு திறந்த முறையில் காணப்பட்டுள்ளது. பிற்பாடு முக்கிய பொருட்கள் காலநிலையின் காரணமாக பொருட்கள் சேதம் அடைவதால் பின் உடல் அமைப்பை மூடிய முறையில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடிச்சட்டம்.



கண்டி குண்டகசாலையில் முதன்முதலில் மேற்கொண்டார்கள். இவ் அமைப்புப் பகுதி பாரஊர்தியின் முக்கிய உடலமைப்பின் பின்பகுதியின் திறந்த கதவு, மூடு கதவுகள் ஆகும் என ஆரம்பகால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

1960-1970 காலப்பகுதியில் கண்டி குண்டகசாலை உடற்கட்டமைப்பு வேலைப்பாடுகளை உசாவலாக எடுத்தும் (copy) சிங்களப் பிரதேசத்தவர்களது நுணுக்கங்களைக் கண்டி குண்டகசாலையில் பயிற்சி பெற்றவர்கள் பாரஊர்தி உடற்கட்டமைப்பு வேலைப்பாடுகளை வீடுகளுக்குச் சென்று மேற்கொண்டதாகவும், பின்னர் யாழ்ப்பாண பிரதேசத்தில் 'கட்டபாஸ்' என்பவர் முதன்முதலில் உடற்கட்டமைப்பு நிலையம் ஒன்றை நிறுவினார் எனவும் ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு உடற்கட்டமைப்பு மேற்கொள்ளப்பட்ட யாழ்மாவட்ட உடற்கட்டமைப்பாளர்கள், பிரதேசங்கள்,

- கட்டபாஸ்- 1965
- லக்சுமி உடல் அமைப்பு. மாஸ்ரர்- 1965- பருத்தித்துறை
- நாகரத்தினம்- 1969- வேலணை
- ராசரத்தினம், ஸ்ரார் body bass- 1970 – ஓட்டுமடம்
- வித்துவான்- 1970- நீர்வேலி
- வீரபாகு- 1970- சாவகச்சேரி
- யாழ் பொடி சின்னத்தம்பி- 1975- ஓட்டுமடம்
- சிவக்கொழுந்து- 1975- புறாப்பொறுக்கி
- விஸ்வலிங்கம்-1975- நீர்வேலி
- குமரகுரு-1975- கரவெட்டி
- துரைச்சாமி-1975- நீர்வேலி
- வாந்தன்- 1977- நீர்வேலி
- இராஜரலிங்கம்- 1977 வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970-1990 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பெரியதம்பி தம்பிஐயா என்பவர் 'யாழ் பொடி சின்னத்தம்பி' என்ற அடைமொழியில் பிரபல்யமான பாரஊர்தி உடல் வடிவமைப்பாளராகக் காணப்பட்டார். கண்டி குண்டகசாலை உடற்கட்டமைப்பைப் போல் அல்லாது உறுதிப்பாடு, தரம் உடையதாகக் கட்டமைத்தார் எனவும், 'யாழ் பொடி சின்னத்தம்பி' என்பவரைப் பாரஊர்திகளை இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்று இவரது திறமை, உடற்கட்டமைப்பைப் பார்த்து இவரை நிறுவனத்திற்கு அழைத்துப் பாராட்டியதாக ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

## பாரவூர்தி அலங்காரங்கள்
## யாழ்ப்பாணப் பாரஊர்திகளில் உள்ள அலங்காரங்கள் அதன் அர்த்தங்கள்.

"நாங்கள் பார ஊர்திகளில் கொண்டுவரப்படும் அலங்காரங்களில் மரச்சிற்பம், சில்வர் அலங்காரம், சித்திரங்களின் உள்ளாந்த அர்த்தங்கள் எங்களுக்குத் தெரியாது எனவும் ஊர்தியைப் பாதுகாக்கவும், அழகுக்காகவும், கவர்ச்சிக்காகவும், மற்றையவர்களது அலங்காரம் போடப்பட்ட ஊர்தியை விட, என்னுடையது சிறப்பாகவும் கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவும் யாழ்ப்பாணத்துப் பாரஊர்திகளில் அலங்காரங்களைக் கொண்டுவருவதாக பாரஊர்தி ஓட்டுனர்கள், உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

"யாழ்ப்பாணத்தில் நிறுவனங்கள் / கடைகளுக்காக விளம்பரங்களைக் காவிச்செல்லும் பார ஊர்திகளின் உரிமையாளர்கள் கூறுகையில், நாங்கள் நிறுவனங்கள்/ கடைகளை விளம்பரப்படுத்துவதற்காக விளம்பரரீதியான சித்திரங்களை, எழுத்துக்களை வரையச் சொல்கின்றோம். அத்துடன் சில்வர், மரச்சிற்ப அலங்காரங்களைப், பெரிதாக விரும்பவில்லை என்றாலும் அழகு, கவர்ச்சிக்காகக் கொண்டுவருகின்றோம் என்கின்றனர்.

### யாழ்ப்பாணப் பாரஊர்திகளில் அலங்கார வேலைப்பாடுகளின் தோற்றம்.

"இந்த சுதேசியக்கலை வடிவம் வளர்ச்சியடைந்த நாடுகளில் பிரபல்யம் பெறத் தொடங்கியது 1970 களிலேயே ஆகும். ஒவ்வொரு காலப்பகுதியில் புதிய புதிய ஊடகம் வருகின்றது . இவ் ஊடகங்களை நுகர்கின்ற சமூகம் உருவாகின்றது. ஆரம்ப கால அலங்காரங்களை விரும்புகின்ற, ஏற்கின்ற யாழ்ப்பாணப் பாரஊர்தியுடன் சம்பந்தப்பட்ட சமுகத்தினர் காணப்படவில்லை, ஒவ்வொரு காலப்பகுதியில் பாரஊர்தியுடன் சம்பந்தப்பட்ட அலங்கார ஊடகங்கள் வருகை ஏற்பதனாலும், ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பாளர்கள், ஆரம்ப கால கைவினைக்கலைஞர்கள், வருகைதந்த அலங்கார ஊடகங்களைப் பாரஊர்தியில் இணைத்துப் பார்த்ததாகவும், இவற்றை பாரஊர்தியுடன் சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள், ஊர்தியின் ஓட்டிகள் ஏற்றதாகவும், இதன் பிறகு யாழ்ப்பாணப் பாரஊர்தியுடன் சம்பந்தப்பட்ட அலங்காரங்களை ஏற்கின்ற, விரும்புகின்ற வெகுசனச் சமுகத்தினர் வருகைதந்ததினை ஆராய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1960 களில் சிங்களப்பிரதேசப் பாரஊர்திகளில் அலங்காரங்கள் காணப்படவில்லை என ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றனர். 1970-1971 காலப்பகுதியில் சிங்களப் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணப் பிரதேசதிற்கு வந்த 'மக்ஸி' என்பவர் எழுத்து வேலையையும், 'கிறசியன்' என்பவர் வரைதல் வேலையையும் மேற்கொண்டதாகக் கூறுகின்றனர். இவர்கள் சிங்களப் பிரதேசத்தில் போத்தலத் தெழிற்சாலையில் போத்தல்களுக்குப் 'பூ' அலங்காரம் போட்டதாகவும், இப் 'பூ' அலங்காரத்தினையே யாழ்ப்பாணப் பாரஊர்திகளுக்கு முதன்முதலில் வரைந்தார்கள் எனவும், இதற்குப் பிறகுதான் யாழ்ப்பாணப் பாரஊர்திகளுக்கு அலங்காரங்கள் வரையப்பட்டதாகவும், 'சிவலிங்கம், பொன்னுத்துரை' என்பவர்களும் இவர்களுடன் இணைந்து அலங்காரவேலைகளைச் செய்தார்கள் எனவும் ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றனர்.

"1970/1971 காலப்பகுதியில் பார ஊர்தியின் உட்க்கூரைப்பகுதியில் 'தகரம்' அடித்தார்கள் எனவும், உட்க்கூரைப்பகுதியில் காணப்பட்ட தகரத்தின் பகுதிகளில் அலங்காரத்தினைப் புதுவித நுட்பத்தினைப் பயன்படுத்தி அலங்காரம் போடப்பட்டதாகக் கூறுகின்றனர். அலங்காரம் போடப்பட்ட நுட்பத்தினை விபரித்துக் கூறுகையில், தகட்டினில் வர்ணம் பூசிக்காய்வதற்கு முதல் 'ஒரு தகட்டில் அலங்காரத்தினை வெட்டி, வெட்டிய அவ் அலங்காரத்தினை வர்ணம் பூசப்பட்ட உட்க்கூரைப்பகுதியில் உள்ள 'தகரத்தினில்' கைகளினால் அமர்த்திப் பிடித்து, வெட்டிய இடைவெளியில் 'பற்ரவைத்த மெழுகுதிரியைப் பிடிக்கும் போது, மெழுகுதிரியின் கறுப்பு நிறப் புகை வெட்டிய இடைவெளியில் பதியும் எனக்கூறுகின்றனர். இவ்வாறு உட்க்கூரைப்பகுதியில் அலங்காரம் போடப்பட்டதாக ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றனர்.

"பாரஊர்தியின் முன்முகப்புக் கூரைப்குதியில் 1970 காலப்பகுதியின் பின்னர் 'Hard bord' அடித்தார்கள். 'Hard bord' அடித்ததுக்குப் பிறகு, 1970-1980 காலப்பகுதியில் 'போமிகா sheet' (அலங்காரம் நிரப்பட்ட தாள் ) உள்முகப்பு மேற்க்கூரைப்பகுதியில் ஒட்டினார்கள். பின்னர் 'போமிகா sheet' (அலங்காரம் நிரப்பட்ட தாள் ) ஊடகம் தட்டுப்பாடு ஏற்பட்டபடியால், 1990-2000 காலப்பகுதியில் 'வர்ண பிளாஸ்ரிக் sheet' உள்முகப்பு மேற்க்கூரைப்பகுதியில் வெட்டி ஒட்டினார்கள். 2000 ஆண்டுக்குப் பின்னர் 'வர்ணபிளாஸ்ரிக் ஊடகம்' விற்பனைக்கு அதிகமாக வருகின்றது. 2000 ஆண்டுக்குப் பின்னர் 'வர்ணபிளாஸ்ரிக் அலங்கார வேலைப்பாடுகள்' உள்முகப்பு மேற்கூரைப்பகுதியில் அதிகமாக இடம் பெற்றதாகக் ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றனர்.

"1983களுக்குப் பிறகு 'சிவலிங்கம், பொன்னுத்துரை' போன்றவர்கள் எழுத்து, வரைதல் வேலைகளை மேற்கொண்டதாகச் சொல்கின்றார்கள். 1983 காலப்பகுதிக்கு முதல் பாரஊர்திகளில் கொத்து வேலைப்பாடுகள் பொருத்தப்பட்டதாகவும் ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 காலப்பகுதியில் அலுமினிய ஊடகம் சாதாரண அலங்காரங்களாகப் பாரஊர்தியின் மூலைத்துண்டுகளில் பொருத்தப்பட்டதாகவும், 1988களிற்குப் பிறகு அலுமினிய ஊடகத்திற்கு பதிலாக (Silver) வெள்ளிரும்பு ஊடகம் சார்ந்த அலங்கார வேலைப்பாடுகள் தோற்றம் பெற்றதாகவும், தகட்டுமூலை, செல்பீலிங் பூட்டுதல், மூலைத்தகடு பூட்டுதல் போன்ற சாதாரண வேலைப்பாடுகள் ஆரம்பத்தில் வெள்ளிரும்பினால்ச் செய்யப்பட்டதாவும், 2000 ஆண்டுக்குப் பிறகு அதிகமான 'சில்வர் சிற்ப அலங்கார வேலப்பாடுகள்' பாரஊர்திகளில் இடம்பெற்றதாகக் ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றார்கள். பாரஊர்திகளில் நிறுவனங்களின் பெயர்கள் எழுதப்பட்டதாக ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர். 1983 காலப்பகுதிகளுக்குப் பிறகு பாரஊர்தி அலங்கார வேலைப்பாடுகளை உறுதியாகவும், அழகாகவும் யாழ்ப்பாணத்தவர்கள் செய்ய முயற்சித்தார்கள் எனக் கூறுகின்றனர்.

1980, 1983 களுக்குப் பிறகு படிப்படியாக பாரஊர்தி அலங்கார வேலைப்பாடுகள் வளர்ச்சி பெறுகின்றது. நில உருக்களை, விளம்பர உள்ளடக்கங்களைப் பாரஊர்தியின் பாகங்களில் வரைகின்றார்கள். ஆரம்பத்தில் சிங்களப் பிரதேசங்களிலிருந்து வந்தவர்களால் நில உருக்கள் வரையப்பட்டதாக ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றார்கள்.

"யாழ்பாணத்துப் பாரஊர்தியில் 1995 காலப்பகுதிக்குப்பிறகு மதம் சார்பான வரைதல்கள் வரையப்பட்டதாக சே.மகேசன் என்பவர் கூறுகின்றார். யாழ்ப்பாணச் சமூகத்தில் இந்துசமயம், கிறிஸ்தவசமயங்களைப் பின்பற்றுபவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் ஆரம்பத்தில் மதங்கள் தொடர்பான வரைதல்களை ஆலயங்களில் வரையும் மரபினைக் கொண்டிருத்தனர். இதனால் ஊர்தியில் மதம் சார்பான வரைதலைக் கொண்டுவருவதை ஏற்கவில்லை எனவும், ஏன் என்றால் 'கடவுள்களை ஆலயங்களில் வரைந்து வணங்க வேண்டும் என ஆரம்காலச் சமூகத்தினர் எண்ணினார்கள்' எனவும் பின்னர் Clander, திருமண அழைப்பிதழ்கள், கடைகளின் விளம்பரப் பதாதைகளில் மதம் சார்பான வரைதல்கள் வரத்தொடங்கியதன் விளைவாகப் பாரஊர்திகளிலும் மதங்கள் தொடர்பான வரைதல் வந்திருக்கலாம் எனவும், இதன்பிறகே பாரஊர்தியில் மதங்கள் தொடர்பான வரைதல்களை ஏற்கும் சமூகத்தினர் வந்திருக்கலாம் என ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர். 1988 காலப்பகுதியில விமானம், கப்பல், செடி, கொடிகளை வரைந்தார்கள் எனவும், பின்னர் மிருகங்கள், பறவைகள் வரைந்தார்கள் எனவும், 1995 காலப்பகுதியில் 'பசு' வரைந்ததன் பின்னர் மதம் சார்பான வரைதலைக் கொண்டுவந்தார்கள் என சே.மகேசன் என்பவர் கூறுகின்றார்.

"1980 காலப்பகுதியில் மரச்சிற்பங்கள் முதன்முதலில் 'நாகரத்தினம் Body Boss' என்பவரால் யாழ்ப்பாணத்துப் பாரஊர்களில் கொண்டுவரப்பட்டதாகவும், பாரஊர்தியின் பின்பகுதியில் பார்வக்கண்டம் எனும் பகுதியில் 'நாகரத்தினம்' என்பவரால் கொத்துவேலை அலங்காரம் போடப்பட்டதாகவும், 1980களுக்குப் பிறகுதான் யாழ்மாவட்ட பாரஊர்திகளில் கொத்து வேலைப்பாடுகள் பொருத்தப்பட்டதாகவும் ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1980 காலப்பகுதியில் அலுமினிய ஊடகம் சாதாரண அலங்காரங்களாகப் பாரஊர்தியின் மூலைத்துண்டுகளில் பொருத்தப்பட்டதாகவும், 1988களிற்குப் பிறகு அலுமினிய ஊடகத்திற்கு பதிலாக (Silver) வெள்ளிரும்பு ஊடகம் சார்ந்த அலங்கார வேலைப்பாடுகள் தோற்றம் பெற்றதாகவும், தகட்டுமூலை, செல்பீலிங் பூட்டுதல், மூலைத்தகடு பூட்டுதல் போன்ற சாதாரண வேலைப்பாடுகள் ஆரம்பத்தில் வெள்ளிரும்பினால்ச் செய்யப்பட்டதாவும், 2000 ஆண்டுக்குப் பிறகு அதிகமான 'சில்வர் சிறப அலங்கார வேலப்பாடுகள்' பாரஊர்திகளில் இடம்பெற்றதாகக் ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றார்கள்.

1990களுக்குப் பிறகு பாவனை, அழகுபடுத்தல் பாரஊர்தியில் அதிகம் உள்ளீர்க்கப்பட்டதாகவும், யாழ்ப்பாணத்தில் 1990-2000 காலப்பகுதியில் தரமான வேலைகள், அழகுபடுத்தலுடன் கவர்ச்சியாகப் உருவாகியதாகவும், யாழ்ப்பாணப் பாரஊர்திகளுக்கு தனியான சந்தைப் பெறுமதி உருவாகியதாகவும், தற்காலம் வரை இச்சந்தைப் பெறுமதி இருப்பதாகவும் ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றார்கள்.

"1990 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில், பாரஊர்தியில் வரைபவர்கள் சமூகம் காணப்பட்டதாகவும், இவர்களில் பொன்னுத்துரை, பட்டாபி, தனம், சேகர், சத்தர், சனா போன்றவர்கள் வரைந்ததல், எழுத்து வேலைகளை மேற்கொண்டார் என ஆரம்ப கால உடற்க்கட்டமைப்பளர்கள் கூறுகின்றார்கள்.

"யாழ்ப்பாணப் பாரஊர்திகளின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் காணப்பட்ட பெறுமதிகள்.

| காலப்பகுதிகள் | பெறுமதிகள் |
|---|---|
| 1950-1960 | 2500/= |
| 1960-1970 | 4500-7500/= |
| 1980-1985 | 45000-50000/= |
| 1990-1995 | 200000-300000/= |
| 2000-2006 | 700000/= |
| தற்காலம் | 1500000/= |

புதிய ஊடகங்களின் வருகை, அலங்கார மேம்படுத்தல்கள், பாரஊர்திகளின் தேவைகள் என்பவற்றால் உரிமையாளர்கள், ஊர்தி ஓட்டிக்ளின் சுயமதிப்பையும் அவர்களது அடையாளங்களையும், காவிச் செல்லும் கவர்ச்சியான ஊடகமாக பாரஊர்தியினை வைத்திருக்கும் உரிமையாளர்கள், ஊர்தி ஓட்டிகள் நினைப்பதால் எதிர்காலத்தில் இன்னும் யாழ்ப்பாணப் பாரஊர்திகளின் பெறுமதிகள் அதிகரிக்கலாம் ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள், ஆரம்ப கால ஊர்தி ஓட்டிகள் கூறுகின்றார்கள்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அலங்காரங்கள் நிரப்பப்படும் பாகங்கள்.

"பாரஊர்திகளின் அடிச்சட்டகம் தனியான பாகமாக England, Japan, India போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அடிச்சட்டகத்தில் இருந்து திட்டமிட்டு உரிய அளவுகளில் வீடு அல்லது கப்பல்கள் கட்டுவது மாதிரி தகரம், மரத்தினை கலந்து முன் முகப்பகுதி பின் உடற்பகுதிகளை உடற்கட்டமைப்பாளர்கள் கட்டமைப்புச் செய்கின்றதாக ஆரம்ப கால உடற்கட்டமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

"யாழ்ப்பாணத்தில் 2 வகையான வடிவத்தில் பாரஊர்திகள் காணப்படுகின்றது. 2 வகையான பாரஊர்திளின் அமைப்புக்கள் / வடிவங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. அவ் வடிவத்தில் முன் முகத்தின் வடிவங்கள் ( CAP ) வேறுபட்டதாகவும், 2 வகையான பாரஊர்திளின் பின்பகுதி பொதுவான வடிவத்தில் உருவாக்கப்பட்டு அலங்காரங்கள் நிரப்பப்படுவதாகவும், பேச்சு வழக்கில் பாரஊர்திகளின் பாகங்களை உச்சரிப்பதாகவும் கூறுகின்றார்.


❖ **LANKA ASHOK LEYLAND** பாரஊர்திகளில் அலங்காரங்கள் நிரப்பப்படும் பாகங்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **ISUSU** பாரஊர்திகளில் அலங்காரங்கள் நிரப்பப்படும் பாகங்கள்.




❖ கப் (**Cap**).






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீற் பெட்டி
## பாரஊர்தியில் உடல் வடிவமைப்பு.

பாரஊர்தியின் 'கப்'(cap) தவிர்ந்த பின் உடல் பகுதி(Body), பின்பகுதி அமைப்புப் பகுதிகள் (Body)உடற்பகுதி என அழைக்கின்றனர். இதை செயற்படுத்துபவர், திட்டமிட்டுபவர் Body boss என அழைக்கப்படுவதாக கூறுகின்றனர். இச்செயற்பட்டிற்கு கீழ் குறிப்பிட்டுள்ள படிமுறைகளை பின்பற்றி வடிவமைத்தல் உடல் வடிவமைப்பு ஆகம்.

### (இ) பாரஊர்தியின் முன்முகத்தினை வடிவமைத்தல்.

"பாரஊர்தியின் உடற்பகுதி தவிர்ந்த (Body) 'முன் முக அமைப்பினை' (Cap) தகர வடிவமைப்பாளர் (Tinker) வடிவமைக்கின்றனர். தகரங்களை வைத்து உரிய அளவுகளில் திட்டமிட்டு தனது கற்பனையில் தகரங்களை வெட்டி ஒட்டி ஒவ்வெரு வடிவத்தில் வடிவமைக்கப்பதாகவும், இச்செயற்பட்டிற்கு கீழ் குறிப்பிட்டுள்ள படிமுறைகளை பின்பற்றி வடிவமைத்தல் பாரஊர்தியின் முன்முக வடிவமைப்பு ஆகும்.





### பாரஊர்தி உள்கூரை வடிவமைப்பு.

"பாரஊர்தி உள்கூரை வடிவமைப்பு cap ன் உட்பகுதியில் செய்யப்படும் அலங்கார அமைப்பாகும். capக்கு கட்டைகள் போட்டு, முன்முக வடிவமைப்பு செயற்பாடுகள் முடிந்த பிறகு உட்கூரை வேலையின் செயற்பாடுகள் ஆரம்பமாகும். உட்கூரை பகுதியில் மரச்செதுக்கல் / வர்ணபிளாஸ்ரிக் அலங்காரங்கரங்களை கைவினைஞர்கள் சோடிக்கின்றார்கள். கீழ் குறிப்பிட்டுள்ள படிமுறைகளை பின்பற்றி வடிவமைத்தல் பாரஊர்தியின் உள்கூரை வடிவமைப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரஊர்தி அலங்காரத்திற்கும் பிற ஜனரஞ்சக ஊர்தியின் அலங்காரத்திற்குமான ஒற்றுமை வேற்றுமை.

“பிற ஜனரஞ்சக ஊர்திகள் எனும்பொழுது முச்சக்கரவண்டிகள், பேரூந்துகள், ஐஸ்கிறீம் வான்கள் ஆகும். முச்சக்கரவண்டிகள், பேரூந்துகள், ஐஸ்கிறீம் ஊர்திகள் போன்றவற்றில் ஒட்டுச் சித்திர (Sticker) அலங்காரக் காட்டுருக்கள் , ஒட்டு அலங்கார எழுத்துக்கள், போன்ற அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் ஐஸ்கிறீம் வான் ஊர்திகளில் வரைதல்கள், எழுத்துக்கள் வரையப்பட்டு இருந்துள்ளது. ஒட்டுச் சித்திர (Digital Sticker) அலங்காரக் காட்டுருக்கள் வருகையினால் வரைதல்களுக்கான தேவை தற்காலத்தில் ஜனரஞ்சக ஊர்திகளில் இல்லாமல் போய்விட்டது . ஆனால் பாரஊர்தியில் பிற ஜனரஞ்சக ஊர்திகளைப் போல் அல்லாமல் வரைதல்கள், எழுத்துக்கள் தற்காலத்திலும் தொடர்வதாகவும் எதிர் காலத்தில் தொடரும் எனவும் கூறுகின்றார்.

“பிற ஜனரஞ்சக ஊர்திகள் தூர பிரதேசங்களுக்கு பாரமான பொருட்களை காவிச்செல்வது இல்லை , பாரஊர்திகள் தூர பிரதேசங்களுக்கு பாரமான பொருட்களைக் காவிச்செல்லப் பயன்படுகிறது. இதனால் பாரஊர்திளில் பயணப்பாதை முகவரிகள், உரிமையாளரின், ஓட்டுனர்களின் கைவினைக்கலைஞர்களின், பெயர்கள், நிறுவனங்களின் பெயர்கள் ஆகியவற்றினை அடையாளப்படுத்த எழுத்து உருக்கள் குறியீடுகள் என்பவை தனித்துவமாகப் பயன்படத்தப்படுகின்றது. எங்களது நம்பிக்கைகள், சடங்குகள், அர்த்தங்கள் என்பவை ஜனரஞ்சக ஊர்திகளில் இல்லை எனவும் அத்துடன் பிற ஜனரஞ்சக ஊர்திகளில் காணப்படும் ஒட்டுச் சித்திர (Sticker) அலங்காரக் காட்டுருக்களில் உள்ளடக்கங்களாக சினிமா நடிகர்களின் படங்கள், கவிதைகள் என்பவை கொண்டுவரப்படுவதாகவும் பாரஊர்தியில் சினிமா நடிகர்களின் படங்கள், கவிதைகள் போன்ற உள்ளடக்கங்களை முற்றாக தவிர்ப்பதாகவும் மதங்கள் தொடர்பான உள்ளடக்கங்களை அதிகம் கொண்டுவர எண்ணுவதாகவும், பாரஊர்திகள், ஜனரஞ்சக ஊர்திகளை வைத்து இருப்பவர்கள் இரசனையில் வேறுபட்ட மாற்றங்களை கொண்டு இருப்பதாகவும் கூறுகின்றார்.

“ஜனரஞ்சக ஊர்திகள், பாரஊர்திகள் போல உடல்கள் கட்டமைக்கப்படுவதில்லை. ஜனரஞ்சக ஊர்திகளில் தச்சர்களின் தலையீடு இல்லை எனவும், பாரஊர்திகளின் உடல்களை கட்டமைக்க 3 / 6 மாதம் / 1 வருடகாலம் வேண்டும் எனவும், இக்கால அளவுகளைவிட இன்னும் அதிககால அளவுகள் உடல்களை கட்டமைக்க தேவை எனவும் நாங்கள் ஜனரஞ்சக ஊர்திகளை, பாரஊர்திகளைப் போல பார்ப்பது இல்லை எனவும் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"ஜனரஞ்சக ஊர்திகளை வைத்து இருப்பவர்கள் கூறுகின்றார்கள், நாங்கள் அழகு, கவர்ச்சிக்காக அலங்காரங்களை கொண்டு வர எண்ணுகின்றோம், ஊர்திகளை ஓட்டும் போது மகிழ்ச்சியான அனுபவம் ஏற்படுவதகவும் அழகான, கவர்ச்சியான ஊர்திகளை வைத்திருக்கும் போது சமூகத்தில் அந்தஸ்து, மதிப்பு ஏற்படுவதாகவும் வேறு நபர்கள் எங்களது அலங்காரம் செய்யப்பட்ட கவர்ச்சியான ஊர்திகளை பார்க்கும்போது பெருமை ஏற்படுவதாகவும், ஊர்திகளை ரதம், வீடு போல நாங்கள் பார்ப்பதாகவும் ஊர்திகளின் பாதுகாப்பிற்காக மதம் தொடர்பான விடையங்களை கொண்டு வருவதாகவும் ஆனால் நாங்கள் மதம் சார்ந்தவற்றை ஊர்திகளின் உட்பகுதியில் வணங்குவதற்கு மாத்திரம் கொண்டு வருவதாக கூறுகின்றனர். "இவ்வாறே பாரஊர்திகளை வைத்து இருப்பவர்களும் கூறுகின்றார்கள். ஆனால் மதம் சார்ந்தவற்றை ஊர்திகளின் உட்பகுதியில் வணங்குவதற்காகவும் ஊர்திகளின் வெளிப்பகுதியில் பாதுகாப்பிற்காகவும், அழகுக்காகவும் கொண்டுவர எண்ணுவதாக கூறுகின்றார்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கான பாரஊர்தியின் அடையாளமானது வேற்று நாடுகளின் அதாவது இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் ஊர்தியில் உள்ளடக்கப்படுகின்ற சினிமா சார்ந்தவர்களின் உருக்கள், சமூகப்பிரபலங்கள் சார்ந்தவர்களின் உருக்கள் என்பவை உள்ளடக்கப்படவில்லை. அத்தோடு சினிமா என்பது தற்காலத்தில் பிரபல்யமாக உள்ளது. தென்னிந்திய சினிமா தொடர்பான பிரபலங்கள், பிரபலங்களின் வாசகங்கள், கவிதைகள் என்பது யாழ்ப்பாணத்து ஜனரஞ்சக ஊர்திகளில் காணப்பட்டாலும், யாழ்ப்பாணத்துப் பாரஊர்திகளில் இவ் உள்ளடக்கங்கள் கொண்டு வரப்படுவது இல்லை அத்தோடு இவ்வகையில் ஏனைய ஆசிய நாடுகளின் பாரஊர்திகளின் தனித்துவத்தை விட, இலங்கையின் பிற மாவட்டங்களில் உள்ள பாரஊர்திகளைப்பார்க்கிலும், யாழ்ப்பாணத்துப் பாரஊர்திகள் தனித்துவம், யாழ்ப்பாணத்தவர் வாழ்வியலோடு ஒன்றித்து நிற்கின்ற கலைவடிவமாக யாழ்ப்பாணத்துப் பாரஊர்தி கலைவடிவம் காணப்படுகின்றது.

விஜயகுமார் விதூஷன்,
யாழ். பல்கலைக்கழகம்,
நுண்கலைத்துறை.
(2012/A/SPI/579)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது சங்கத்தின் தலைவர்கள் (1997 தொடக்கம் இன்று வரை)

## திரு. சிவலிங்கம் வேதாரணியம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட வதிவிடமாகக் கொண்ட இவர் 23.06.1997 -28.07.1998 காலப்பகுதியில் தலைவராக பதவி வகித்துள்ளார். இவர் தந்தையாருடன் இணைந்து பாரவூர்தி சேவை மற்றும் அரிசி ஆலை என்பவற்றை நடாத்தி வந்தவர். எமது சங்கத்தில் ஆர்வத்துடன் இணைந்து சங்கம் ஆரம்பிப்பதற்காக முழுமனதுடனும் அக்கறையுடனும் செயற்பட்டு சங்கம் உருவாகுவதற்கு உதவியவர். இவர் காலப்பகுதியிலே எமது சங்கம் கூட்டுறவுச் சங்கமாக பதிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமரர் திரு.வீரகத்தி குமாரசாமி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 29.07.1998 – 22.06.1999, 15.07.2000 – 28.09.2002 ஆகிய காலப்பகுதிகளில் தலைவராகப் பதவி வகித்துள்ளதுடன், இக்காலப்பகுதிகளில் தலைவராக இருந்து சங்க வளர்ச்சிக்காக தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளார். E.V.K என்னும் பெயரில் லொறியை வைத்து கொழும்பு யாழ்ப்பாணம் வரை வியாபாரம் செய்ததோடு முல்லைத்தீவின் பிரிவின் மினிபஸ் சங்கத் தலைவராகவும் சிலகாலம் சேவையாற்றினார். அத்தோடு சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தில் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து சங்கத்திற்கு அரியபல சேவைகள் ஆற்றினார். அதன்பின் யாழ்ப்பாணம் பாரவூர்திச் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு அச்சங்கம் சிறப்புற சேவையை நடத்தி தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டார். நோய் வாய்ப்புற்ற நிலையிலும் (கால்கள் இழந்த நிலையிலும்) சங்கக் கடமையில் ஈடுபட்டு சிறப்பாக மேற்கொண்டவர். இருந்தும் தனது இரண்டு கால்களையும் இழந்து அமரத்துவம் அடைந்த அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

## திரு. சிவலிங்கம் சுந்தரலிங்கம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட வதிவிடமாகக் கொண்ட இவர் தந்தையாருடன் இணைந்து அரிசி ஆலையினையும் நடாத்தி வந்தவர். எமது சங்கத் தலைவராக 23.06.1999 – 14.07.2000 பதவி வகித்தது மட்டுமன்றி பேக்கரி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் தலைவராக பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு.இரத்தினசிங்கம் அரிகரன்

சாதாரண அங்கத்தவராக இச்சங்கத்தில் இணைந்து அதன் வளர்ச்சிப் பாதையில் 29.09.2002 – 11.09.2010 வரை சிறந்த தலைவராக பணியாற்றியவர். இவரது காலப்பகுதியில் சங்க அலுவலகத்திற்கென சொந்தமான காணி கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டதோடு அலுவலக கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் யாழ் மாவட்டத்திற்கான உணவு விநியோக சேவையின் பெரும் பகுதியினை அரச அதிபருடன் இணைந்து பூர்த்தி செய்து பெரும்பாடுபட்டவர். தொடர்ந்து யாழ் மாவட்டத்திற்கான மணல் விநியோக சேவை இவரது காலத்தில் சங்கத்தினூடாக ஆரம்பித்தது.

## திரு. கதிரவேலு இலங்கநாதன்



சாதாரண அங்கத்தவராக இச்சங்கத்தில் இணைந்து அதன் வளர்ச்சிப் பாதையில் 12.09.2010 – 10.11.2012 வரை சங்கத்தினை நெறிப்படுத்தி வழிப்படுத்திய சிறந்த தலைவராக இவர் காணப்படுகின்றார். இவரது காலப்பகுதியில் சங்கத்தை நெறிப்படுத்தவதில் கூடிய கவனம் செலுத்தியவர். இவரது காலப்பகுதியில் அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு அமைய சேமிப்பு பணத்தின் ஒரு பகுதி மீள வழங்கப்பட்டது. யாழ் மாவட்டத்திற்கான மணல் விநியோக சேவையினை வழிப்படுத்திய தலைவராக காணப்படுகின்றார்.

## திரு.செல்லத்துரை ஜெயக்குமார்



சங்க வரலாற்றில் இளம் புரட்சிகர தலைவராக 11.11.2012 தொடக்கம் இன்றுவரை கடமையாற்றிக் கொண்டிருக்கும் தலைவராவார். இவர் காலப்பகுதியில் சங்கம் புத்துணர்ச்சி பெற்று இலாபத்தினை நோக்கி பயணிக்க ஆரம்பமாகியது. அத்துடன் தொழில் வாய்ப்பு இழந்த அங்கத்தவர்கள் மீண்டும் தொழில் வாய்ப்பு பெறவும், நேரடியாக மணல் விநியோக சேவையினை அரச அதிபரின் கீழ் பெற்று மேற்கொள்வதோடு சிறந்த வழிகாட்டுதல்களையும் ஒத்துழைப்பினையும் இச்சங்கத்திற்கு வழங்கிவரும் சிறந்த வழிகாட்டியானவர். மேலும் சங்கம் மணல் சேவையின்போது இழந்த பணத்தினை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளில் பெரும் பங்காற்றியவர். அத்துடன் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும், இறப்பின்போது அங்கத்தவருக்கான மரணசகாய நிதி வழங்குவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு செயற்படுத்தி ஒத்துழைப்பு வழங்குகின்ற ஒரு சிறந்த தலைவராக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணியாளர் கௌரவிப்பு











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சங்க கடந்த கால தலைவர், பொதுமுகாமையாளர், கணக்குப்பதிவாளர் விபரம்

| காலப்பகுதி | தலைவர் | பொதுமுகாமையாளர் | கணக்குப்பதிவாளர் |
|---|---|---|---|
| 1997 | சி.வேதாரணியம் | சு.தர்மலிங்கம் | |
| 1998 | வீ.குமாரசாமி | சு.தர்மலிங்கம் | |
| 1999 | சி.சுந்தரலிங்கம் | சு.தர்மலிங்கம் | |
| 2000 | வீ.குமாரசாமி | க.செல்வராசா | |
| 2001 - 2002 | வீ.குமாரசாமி | க.செல்வராசா | |
| 2003 | இ.அரிகரன் | க.செல்வராசா | |
| 2004 | இ.அரிகரன் | க.செல்வராசா | |
| 2005 | இ.அரிகரன் | க.செல்வராசா | |
| 2006 | இ.அரிகரன் | க.செல்வராசா | |
| 2007 | இ.அரிகரன் | இ.ரவிக்குமார் | |
| 2008 | இ.அரிகரன் | இ.ரவிக்குமார் | யோ.ரதிகா |
| 2009 | இ.அரிகரன் | இ.ரவிக்குமார் | யோ.ரதிகா |
| 2010 | இ.அரிகரன் | இ.ரவிக்குமார் | யோ.ரதிகா |
| 2011 | க.இலங்கநாதன் | இ.ரவிக்குமார் | யோ.ரதிகா |
| 2012 | க.இலங்கநாதன் | இ.ரவிக்குமார் | யோ.ரதிகா |
| 2013 | செ.ஜெயக்குமார் | இ.ரவிக்குமார் | யோ.ரதிகா |
| 2014 | செ.ஜெயக்குமார் | | யோ.ரதிகா |
| 2015 | செ.ஜெயக்குமார் | பி.கஜேந்தினி | யோ.ரதிகா |
| 2016 | செ.ஜெயக்குமார் | பி.கஜேந்தினி | யோ.ரதிகா |
| 2017 - இன்றுவரை | செ.ஜெயக்குமார் | பி.கஜேந்தினி | யோ.ரதிகா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக்கான அனுசரணையாளர்கள்

1. அல்டி எலக்ரோனிக்ஸ், இல.15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2. நவம் மோட்டோர்ஸ் என்ஜினியரிங், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் (சோ.நவரத்தினம் அ. இல -52)
3. வானதி அரிசி ஆலை, கொடிகாமம் வீதி, நெல்லியடி. (வீ. குருசாமி அ. இல -76)
4. கஜமுகன் ஹாட்வெயார், யாழ்ப்பாணம். (பே. நாகரத்தினம் அ. இல -98)
5. S. L. P Transport. 101, ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கு. (சி. லோகநாதன் அ.இல -350)
6. ஈஸ்வரன் கிறேசர், புத்தூர் கிழக்கு, புத்தூர். (க. மகாலிங்கம் அ. இல -369)
7. ஜெயந்தி கட்டடப்பொருட்கள் வாணிபம், இல. 178, வேங்கை வீதி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. (சி.ரவிச்சந்திரன் அ. இல -417)
8. துர்க்கா கிறேசர், அந்திரான், ஊரணி கிழக்கு, புத்தூர். (வ.சிவநாதன் அ. இல-418)
9. தரணிகா மோட்டோர்ஸ், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஆ.சொக்கலிங்கம் அ. இல -582)
10. செல்வன்ஸ் டீசல் எஞ்சினியர்ஸ், பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தி, கோப்பாய். (அ.சற்குணநாதன் அ.இல-666)
11. சண் மோட்டோர்ஸ், இல.779, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ப.திருநீலகண்டன் அ. இல -726)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சங்கத்தின் இதயம் கனிந்த நன்றிகள்

எமது யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளியிடப்படும் இந்நூல் சிறப்பாக அமைய ஆசிச்செய்திகள் வழங்கிய செஞ்சொற் செல்வன் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கும், புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்குத்தந்தை வண.பிதா ம.ரெஜி இராஜேஸ்வரன் அவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய கௌரவ முதலமைச்சர் அவர்களுக்கும், யாழ் அரச அதிபர் திரு.நா.வேதநாயகன் அவர்களுக்கும், கூட்டுறவு அமைச்சர் திருமதி ச.அனந்தி அவர்களுக்கும், முன்னாள் கூட்டுறவு அமைச்சர், மாகாணசபை உறுப்பினர் திரு.பொ.ஐங்கரநேசன் அவர்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச்சங்க பதிவாளரும் திரு.க.சிவகரன் அவர்களுக்கும், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு.எஸ்.முரளிதரன் அவர்களுக்கும், பிரதேச செயலர், வடமராட்சி கிழக்கு. திரு.க.கனகேஸ்வரன் அவர்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.மோகன் அவர்களுக்கும், பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி திரு.க.சுஜீந்திரன் அவர்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் .க.சசிதரன் அவர்களுக்கும் , சங்கத் தலைவர் திரு.செ.ஜெயக்குமார் அவர்களுக்கும், சங்கச் செயலாளர் திரு.க.செல்வச்சந்திரன் அவர்களுக்கும், பாரவூர்திச் சங்க அங்கத்தவர் திரு.செ.இராசசேகரம் அவர்களுக்கும், பணியாளர் திருமதி.ச.அனுரேகா அவர்களுக்கும் ஆக்கங்களை வழங்கிய கல்விமான்களுக்கும், குறிப்பாக பாரவூர்தி அலங்கார வேலைப்பாடுகள் தொடர்பாக ஆக்கம் வழங்கிய பல்கலைக்கழக மாணவன் விதூசன் அவர்களுக்கும், பணியாளர்களுக்கும் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கும்
,
இந்நூல் சிறப்புற வெளிவர பெரும்பங்காற்றிய அனுசரணையாளர்களுக்கும் இந்நூலை ஒழுங்கமைத்து அழகாக அச்சுப்பதிப்பு செய்து தந்த யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்திற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

நன்றி

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க
பணிப்பாளர்களும், பணியாளர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சங்கத்தின் தலைவர்கள்

### திரு. நாகராசா விக்னேஸ்வரன்



அவ்வொல்லை வீதி, புலோலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகக் கொண்ட இவர் எமது சங்கத்தில் உப தலைவராக இருந்து 03.01.2001 தொடக்கம் 08.04.2001 வரையான காலப்பகுதியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் சங்கத்தலைவராக பதவி வகித்துள்ளது மட்டுமன்றி சங்க வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

### திரு. சின்னத்துரை தருமசேகரம்



பலாலியை பிறப்பிடமாகவும் மல்லாகத்தினை வதிவிடமாகவும் கொண்ட இவர் எமது சங்கத்தில் உபதலைவராக இருந்து 17.03.2002 - 29.09.2002, 20.11.2007 - 23.12.2007 ஆகிய காலப்பகுதிகளில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதிக்கமைய சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்று, சங்க வளர்ச்சிக்கு தனது பதவிக்காலத்தில் அரும்பணியாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# SUN MOTORS

## சண் மோட்டோர்ஸ்

SM

லங்கா அசோக் லேலண்ட், டாடா வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள், விற்பனையாளர்

TATA

779, K.K.S Road,
Sivalingapuliyady
Jaffna.

Tel: 0776165155, 0213211673, 0212220932

# ஈஸ்வரன் கிறேசர்

உரிமையாளர் க. மகாலிங்கம்

புத்தூர் கிழக்கு, புத்தூர்

T. P : 0776583592





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நவம் மோட்டர்ஸ் எஞ்சினியரிங்
T. P : 0778147138
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்,


துர்க்கா கிரேசர்
உரிமையாளர் : வ. சிவநாதன்
அந்திரான், ஊரணி கிழக்கு, புத்தூர்
T. P : 0778448775

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஓம் கணேசா
## AOM GANNESHAA

S.L.P. TRANSPORT

கட்டிட பொருட்கள், பல்பொருள் பொருட்கள் விற்பனையாளர்

T. P :- 0779234242

No. 101, Station Road,
Kokuvil East, Kokuvil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISUZU

# செல்வன்ஸ் டீசல் எஞ்சினியர்ஸ்

## Selvans Diesel Engineers

**Automotive Engineers, Turning Workers, Complete Lines For Vehicle Repairs And Reconditions.**

Point Pedro Road,
Kopay Junction, Kopay.

T. P :- 0777917693

**Regd No. 11296**

With best compliments from.....!

# KAJAMUGAN HARDWARE

# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டிடப் பொருட்கள், வங்கா கம்பி, G.I பைப் வகைகள், சீமெந்து, Macson Mesh, பெயின்ற் வகைகள் மற்றும் Pepsi Soda & Accessories. அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்

TEL : 021 222 2833 , 021 222 7144 FAX : 021 222 2368
E-mail kajamuganhw@hotmail.com

147,149 STANLEY ROAD,
JAFFNA.

147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணிகா மோட்டோர்ஸ்
# தரணிகா பெப்சி

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

A - 9 வீதி,
கிளிநொச்சி.

தொ. இல : 021 205 7812, 0773131458

# வானதி அரிசி ஆலை

உரிமையாளர் : வீ. குருசாமி

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

தொ. இல : 0777111010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org